Registered as a Newspaper

பக்கங்கள் – 16+16
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 350

திங்கட்கிழமை
11 நவம்பர் 2024

ஐப்பசி 25
வள்ளுவர் ஆண்டு 2055

நாடாளுமன்றத் தேர்தல் -2024
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
அறிவு
ஆற்றல்
ஆளுமை
X 3
சட்டத்தரணி
கேசவன் சயந்தன்

இடுவோம்
புள்ளடியை
தபால்பெட்டிக்கு
X 1

பாராளுமன்றத் தேர்தல் 2024
உங்களில் ஒருத்தி உங்களுக்காக !
X 4
4
உமாச்சந்திரா பிரகாஷ்
Umachandraa Pragash
ஐக்கிய மக்கள் சக்தி
Samagi Jana Balawegaya
ஐக்கிய மக்கள் சக்தி

அன்பு வாசகர்களே,
இன்றைய உதயனுடன்
இலவசமாக 'உதயன் தேர்தல்
சிறப்பிதழை' கேட்டு வாங்க
மறக்காதீர்கள்!

பாராளுமன்றத் தேர்தல் - 2024
வன்னி தேர்தல் மாவட்டம்
அன்றும் இன்றும் என்றும்
தடம் மாறாத
தமிழ்த் தேசிய பயணத்தில்
8
வல்லிபுரம் கமலேஸ்வரன்
முன்னாள் பிரதி அவைத்தலைவர் -
வட மாகாண சபை,
இணைப் பொருளாளர் -
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்துக்கும்
வன்னியின் எல்லைக் காவலனுக்கும்
உங்கள் அமோக வாக்குகளை அளித்து வெற்றி பெறச் செய்வீர்...!
X 8
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

வடக்கை
வளமாக்கிய
கட்சிக்கே
உங்கள்
வாக்கு
சீதநாத்
காசிலிங்கம்
1 X

## பாராளுமன்றத் தேர்தல் - 2024
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்

**அன்புக்குரிய மக்களே!**
'இரு தேசங்கள் ஒரு நாடு' என்ற இலக்கினையடைய, தமிழ்த் தேசக் கொள்கை வழி நின்று நேர்மையாக செயற்பட்டு வருகின்றோம். இலஞ்சம், ஊழலற்ற - செயல் திறன்வாய்ந்த - சொல்லுக்கும் செயலுக்கும் ஒத்திசைவுள்ள இயக்கமாகவே செயற்படுகின்றோம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சலுகைகளுக்கு விலைபோகாத, நேர்மையான அரசியல் பயணத்தையே முன்னெடுத்துவருகின்றோம். எமது அணியின் கொள்கை நிலைப்பாட்டைப் பலப்படுத்த, தமிழ் இனம் தனது வரலாற்றுக் கடமையை ஆற்றும்வகையில், உங்கள் தார்மீக ஆதரவை அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் **'சைக்கிள்'** சின்னத்துக்கு வழங்குமாறு அன்புரிமையுடன் வேண்டிநிற்கின்றோம்.

**தமிழ்த் தேசமாய் பேரெழுச்சி கொள்வோம்!**

கஜேந்திரகுமார்
பொன்னம்பலம்
தலைவர்,
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
பொதுச் செயலாளர்,
அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்.
2

1
கனகரட்ணம் சுகாஷ்
சட்டத்தரணி,
ஊடகப் பேச்சாளர்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

செல்வராசா
கஜேந்திரன்
பொதுச் செயலாளர்,
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
9

'இரு தேசங்கள் ஒரு நாடு'
இலக்கினை அடைய
ஒற்றைத் தலைமையில்
ஓரணியாவோம்!

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

ஊழலற்ற ஆட்சிக்காக
ஒன்றிணைவோம் திசைகாட்டியில்
Dr.S.சிறீபவானந்தராஜா
(MBBS, M.Sc Medical admin)
முன்னாள் பிரதிப் பணிப்பாளர்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.
X 9
01
கீர்த்தி
உதயகுமாரன்
தேசிய மக்கள் சக்தி
JATHIKA JANA BALAWEGAYA (NPP)
08

அடையாளம் மாறாத
அரசியல் மாற்றம்
சுமந்திரன்
X 1

பாராளுமன்றத்தேர்தல் - 2024
மக்களோடு நாம் மக்களுக்காக நாம்
தமிழ் தேசியதத்தின்
சின்னம் - சங்கு
ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி (தமிழ் தேசிய கூட்டமைப்பு)
5
தருமலிங்கம்
சித்தார்த்தன்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
6
பாலச்சந்திரன்
கஜதீபன்
(ஆசிரியர் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்)

7
எம் உரிமைக்கான குரல்
சிவஞானம் சிறீதரன்
தாயகம் தேசியம் தன்னாட்சி
X 7

மக்கள் மனங்களில் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper
பக்கங்கள் – 16+16
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 350
திங்கட்கிழமை
11 நவம்பர் 2024
ஐப்பசி 25
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"எல்லாரும் வாக்குறுதி குடுக்கலாம். நடைமுறைக்கு வந்தால் தான் நம்பலாம் கண்டியளோ"

# இருமாதக் குழந்தையை வீசிவிட்டு பொதுமக்களைத் தாக்கிய பொலிஸ்

## சுன்னாகத்தில் அராஜகம்; விசாரணைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.11
சுன்னாகத்தில் ஏற்பட்ட விபத்தொன்றை அடுத்து பொதுமக்கள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக விசேட பொலிஸ் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் என்று யாழ்ப்பாணம் பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.எஸ்.எம். ஜருள் தெரிவித்துள்ளார்.
நேற்றுமுன்தினம் இரவு சுன்னாகத்தில் நடந்த விபத்துச் சம்பவம் ஒன்றை அடுத்துப் பொலிஸார் அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டனர் என்றும், தாக்குதல் நடத்தினர் எனவும் குற்றஞ்சாட்டப்படுகின்றது. வாகனம் ஒன்றும், மோட்டார் சைக்கிள் ஒன்றுமே விபத்துக்குள்ளாகின என்று தெரிவிக்கப்படுகின்றது. வாகனத்தில் பயணித்தவர்கள் மீதே பொலிஸார் தாக்குதல் நடத்தினர் என்றும், அச்சுறுத்தினர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

15

## விநியோகிக்காது தேங்கியுள்ள 50,000 வாக்காளர் அட்டைகள்!

கொழும்பு, நவ.11
பொதுத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் தபால் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ள நிலையில், சில பகுதிகளுக்கு வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப் படாதுள்ளன என்று தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.
50 ஆயிரம் வாக்காளர் அட்டைகள் தபால் நிலையங்களில் தேங்கியுள்ளன என்றும் கூறப்படுகின்றது.
வாக்காளர் அட்டைகள் கிடைக்காதவர்கள் அருகில் உள்ள தபால் நிலையத்துக்குச்-சென்று அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று பிரதி தபால்மா அதிபர் ராஜித கே.ரணசிங்க தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

# தேர்தல் பரப்புரைகள் இன்று நள்ளிரவு நிறைவு

## விதிகளை மீறினால் கடும் நடவடிக்கை தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்து

**கொழும்பு, நவம்பர் 11**
**நாடாளுமன்றத் தேர்தலுக்கான பரப்புரை நடவடிக்கைகள் யாவும் இன்று நள்ளிரவுடன் முடிவுக்கு வருகின்றன.**

15

## வாக்களிப்பது எவ்வாறு? ஆணைக்குழு விளக்கம்

விரிவு :- பக். 06

## பொதுத் தேர்தல் முறைப்பாடுகள் 2,580

கொழும்பு, நவ.11
பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய குற்றங்கள் தொடர்பில் இதுவரை 2 ஆயிரத்து 580 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

15




# அரசியல் கைதிகளை விரைவில் விடுவிப்போம்

## யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார் ஜனாதிபதி அநுர

யாழ்ப்பாணம், நவ.11
எமது ஆட்சியில் சில சந்தேகங்கள் இருக்கலாம். படிப்படியாக அந்த சந்தேகங்கள் நீங்கும். உங்கள் பிரச்சினைகள் தீரும். எல்லோரும் தமது மொழியில் கதைத்து தமது கலாசாரத்தை பின்பற்றும் நிலையை உருவாக்குவோம்.

15

## மின்கட்டணக் குறைப்புக்காக அவகாசம் கோரும் மி.சபை

கொழும்பு, நவ.11
மின்சாரக் கட்டணக் குறைப்புத் தொடர்பான புதிய பிரேரணையை வழங்கப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் மேலும் 15 நாள்கள் அவகாசம் கோரப்படவுள்ளது என்று இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது. தரவுகளைப் பகுப்பாய்வு செய்து மேலதிக கணக்கீடுகள் செய்யப்படவுள்ளன. அதனாலேயே கால அவகாசம் கோரப்படவுள்ளது என இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது. (அ-எ-இ)

# எல்லைதாண்டி மீன்பிடித்த 23 தமிழக மீனவர்கள் கைது!



யாழ்ப்பாணம், நவ.11
இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் தமிழ்நாட்டு மீனவர்கள் 23 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் 3 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

15

## நாட்டுக்கு திரும்பிய அகதிகள் கைது

யாழ்ப்பாணம், நவ.11
தமிழ்நாட்டில் இருந்து படகு மூலம் நெடுந்தீவுக்கு வந்த 9 பேர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மான் சின்னத்தில் போட்டியிடும் எமது வேட்பாளர்கள்





1
உமாகரன் இராசையா
- சட்டத்தரணி -


2
கதிரேசன் சஜீதரன்
- பிராந்திய முகாமையாளர் -


3
தவச்செல்வம் சிற்பரன்
-கட்டடக் கலைஞர் -


4
நா.கோகிலவாணி
-முன்னாள் போராளி-


9
## வி.மணிவண்ணன்
முதன்மை வேட்பாளர், முன்னாள் முதல்வர்,


5
பிரான்சிஸ் செல்ரன்
யாழ்.பல்கலைக்கழகம்,
அரசியல் விஞ்ஞான பட்டதாரி.
- கிரிக்கட் பயிற்றுனர் -


6
ஸ்ரீ.மிதிலைச்செல்வி
- நிறைவேற்று அதிகாரி SLIC-


7
முருகானந்தன் யசிந்தன்
யாழ்.பல்கலைக்கழகம்,
மெய்யியல் பட்டதாரி. ஆசிரியர்


8
வரதராஜன் பார்த்திபன்
யாழ்.மாநகர சபை முன்னான் உறுப்பினர்

# மான் இற்கு வாக்களிப்போம்

**தமிழ் மக்கள் கூட்டணியின் சின்னமான மானுக்கு எதிரே ஒரு புள்ளடியையும் எமது முதன்மை வேட்பாளரான வி.மணிவண்ணன் அவர்களின் விருப்பு இலக்கமாகிய 9க்கு மேல் ஒரு புள்ளடியும் எமது ஏனைய வேட்பாளர்களில் விரும்பிய இரண்டு வேட்பாளர்களின் இலக்கத்திற்கு மேல் புள்ளடியையும் இடுங்கள்**

| | | |
|---|---|---|
| தமிழ் மக்கள் கூட்டணி |  | X |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 (X) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராளுமன்றத் தேர்தல் 2024

யாழ்ப்பாணம், கிளிநொச்சி
தேர்தல் மாவட்டம்

X 4



சுயநிர்ணய உரிமைக்கான
உரிமைக்குரல்.
பொருளாதார அபிவிருத்திக்கான
செயற்திட்டங்கள்.

மாற்றத்திற்கான
எங்கள் பயணத்தில் .....

**கிருஷ்ணவேணி ஸ்ரீதரன் (கிட்டு)**
பொறியியலாளர், சமூக செயற்பாட்டாளர்.

**இலங்கைத் தமிழரசுக் கட்சி**

## பாராளுமன்றத் தேர்தல் 2024

யாழ்/கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்



தேசத்தின் மீட்புக்காய்
தேசியத்
தலைவர் வழி நின்ற
போராளிகளுக்கான
அரசியல்
அங்கீகாரம்!

போராளி
சிவநாதன் நவீந்திரா
( வேந்தன்)

X 9

**தாயகம் தேசியம் சுயநிர்ணயம்**
ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி

## பாராளுமன்றத் தேர்தல்–2024

யாழ் - கிளி தேர்தல் மாவட்டம்

நாம் தமிழர்
எனத் தலை நிமிர்வோம்
தமிழர் தேசமாய்
அணி திரள்வோம்
ஐக்கியம் ஒன்றே
பலம் என்போம்



தோழர்
**சுரேஷ் பிரேமச்சந்திரன்**
அவர்களுக்கே உங்கள் வாக்கு

X 1

ஐக்கியம் தேசியம் ஜனநாயகம்

**ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி (DTNA)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராளுமன்றத் தேர்தல் - 2024

யாழ்ப்பாணம்,
கிளிநொச்சி மாவட்டம்




- முல்லைத்தீவு குருந்தூர் மலை முதல் வவுனியா வெடுக்குநாறி மலை ஈறாக வடக்குக் கிழக்கெங்கும் தமிழரின் அடையாளங்கள் அழிக்கப்பட்டபோது சட்டப்போர் தொடுத்தவன்.
- நூற்றுக்கும் அதிகமான பொதுநல வழக்குகளில் கட்டணமின்றிக் களமிறங்கியவன்.
- முல்லைத்தீவு செம்மலை நீராவியடிப் பிள்ளையார் கோயில் வளாகத்தினுள் பௌத்த பிக்குவின் உடலை எரிக்க முற்பட்டபோது சட்டப் போராட்டத்தைத் தொடுத்தவன்.
- பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட அப்பாவிகளுக்காகத் துணிந்து களத்தில் இறங்கியவன்.
- மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்கள், மாவீரர் நாள் நினைவேந்தல்களைத் தடுப்பதற்கு வடக்குக் கிழக்கெங்கும் பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட எண்ணிறைந்த வழக்குகளை முறியடித்தவன்.
- மட்டக்களப்பு மாவட்டத்தில் தமது இறந்த உறவுகளை நினைவுகூர்ந்த பத்து அப்பாவிகளைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்தபோது சட்டத்தின் வழியில் போராடி விடுவித்தவன்.
- திருகோணமலையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சியமைக்காகக் கைதுசெய்யப்பட்ட தமிழர்களை வழக்காடி விடுவித்தவன்.
- யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் பொலிஸ் காவலில் மரணமடைந்த இளைஞர்களுக்காக நீதி கேட்டவன்.
- மானிப்பாயில் தனியார் காணிகளை ஆக்கிரமித்திருந்த அரச ஆதரவு ஆயுதக்குழுவை வழக்காடி வெளியேற்றியவன்.

1





**சட்டப் போரைத் தொடர....**

கனகரட்ணம்
**சுகாஷ்**
(சட்டத்தரணி)


X 1

**இலக்கு ஒன்றே இனத்தின் விடுதலை!**

## பாராளுமன்றத் தேர்தல் 2024

### யாழ் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்




| 2 | 5 | 9 |
|---|---|---|
| **கஜேந்திரகுமார் பொன்னம்பலம்** | **நடராஜர் காண்டீபன்** | **செல்வராசா கஜேந்திரன்** |
| முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் | சிரேஸ்ட சட்டத்தரணி | முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் |


X

**அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்**
**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி**

## தமிழர் தேசமாய் எழுவோம்...!

- தமிழ்த் தேசம், இறைமை, சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான தீர்வை வலியுறுத்தல்!
- இனப்படுகொலைக்கான சர்வதேச நீதி, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியை வலியுறுத்தல்...!
- பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தல்..!
- கடற்தொழில், விவசாயம் உள்ளிட்ட தமிழர் தேசத்தின் நிலையான அபிவிருத்திக்காக உழைத்தல்...!
- தமிழர் தாயகத்தை சிங்கள பௌத்த மயமாக்குவதை எதிர்த்தல்..!
- இனப்பரம்பலை மாற்றியமைக்கும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை எதிர்த்தல்...!
- அரச இயந்திரங்களின் ஊடாக மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்புகளை எதிர்த்தல்...!
- வன்முறை, போதைக்குள் சிக்குண்டுள்ள எமது இளைஞர்களை மீட்டு அவர்களை தமிழர் தேசத்தைக் கட்டியெழுப்பும் சக்தியாக மாற்ற செயலாற்றுதல்...!

## இரு தேசங்கள் ஒரு நாடு


X


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்களிப்பது எவ்வாறு? ஆணைக்குழு விளக்கம்

கொழும்பு, நவ.11

**நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் வாக்களிப்பது எவ்வாறு என்பது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆர். எம்.ஏ.எல்.ரத்நாயக்க விளக்கமளித்துள்ளார்.**

அதன்படி வாக்களிக்கும் போது தாம் தெரிவுசெய்யும் கட்சிச் சின்னத்துக்கு அல்லது சுயாதீன குழுவுக்கு அருகில் புள்ளடியிட வேண்டும். அவ்வாறு புள்ளடியிடப்படாத வாக்குச்சீட்டுகள் நிராகரிக்கப்படும். அதன்பின்னர் தமது விருப்பத்தெரிவான வேட்பாளரது இலக்கத்துக்குப் புள்ளடியிட வேண்டும். ஒரு வாக்களருக்கு மூன்று விருப்பத் தெரிவுகள் உள்ளன. வேட்பாளர்களது இலக்கங்கள் அடங்கிய பெயர்ப்பட்டியல் இம்முறை வீடுகளுக்கே விநியோகிக்கப்பட்டுள்ளது. எனவே அதில் தாம் வாக்களிக்கவுள்ள வேட்பாளர்களது எண்களைத் தெளிவாக அவதானிக்க முடியும். தெரிவு செய்யப்படும் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வேட்பாளர்களுக்கு மாத்திரமே வாக்களிக்கமுடியும். மாறாக ஒரு கட்சியை தெரிவு செய்து, பிறிதொரு கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வேட்பாளருக்கு வாக்களிக்கமுடியாது.

அவ்வாறான வாக்குச்சீட்டுகள் நிராகரிக்கப்படும். அதேபோன்று ஒன்றுக்கும் மேற்பட்ட கட்சிகளுக்கோ அல்லது சுயாதீன குழுக்களுக்கோ வாக்களித்திருந்தால் அந்த வாக்குகளும் நிராகரிக்கப்படும். மேலும் 3 க்கும் மேற்பட்ட வேட்பாளர்களுக்கு வாக்களித்தால் அந்த வாக்கும் நிராகரிக்கப்படும் - என்றார். (ச)

# பொருள்களுக்கு வற் வரி குறைப்பு

கொழும்பு, நவ. 11

மார்ச் மாதம் முதல் அத்தியாவசிய உணவுப்பொருள்கள், மருந்துவகைகள்,பாடசாலை உபகரணங்கள் என்பவற்றுக்கான வற் வரியை குறைக்கவுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போது 18% வீதமாக அறவிடப்பட்டு வரும் வற் வரியை 7% அல்லது 5% வீதமாக குறைப்பது பற்றி ஆராய்ந்து வருகிறோம். வருமான வரியும் குறைக்கப்படும். பெப்ரவரி மாதம் எமது வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்படும். மார்ச் மாதம் முதல் குறைக்கப்பட்ட வருமான வரியே அறவிடப்படும்.

வருமான வரி குறைப்பு வற் வரி குறைப்பு என்பன இறைவரி வருமானத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். எனினும் மக்களுக்கு சிறந்த வாழ்வாதாரத்தை ஏற்படுத்திக்கொடுப்பதே எமது நோக்கம். எமது நாடு பொருளாதாரரீதியில் ஸ்திரத்தன்மையடைந்து சர்வதேச நாணயநிதியத்தின் பிடியிலிருந்து விடுபட வேண்டும். தற்போது நடைமுறையிலுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைகள் பொருத்தமற்றவை.

தேர்தல் தினத்தன்று சர்வதேச நாணயநிதியத்தின் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்து கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-6)



மன்னாரில்

# கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் சிக்கினார்

யாழ்ப்பாணம், நவ. 11

மன்னார் நகரில் மேற்கொண்ட சோதனையில் சுமார் எட்டு லட்சம் ரூபா பெறுமதியான கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுப் பகுதியினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து மன்னார் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் திருகோணமலைப் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகளும் இணைந்து மேற்கொண்ட சோதனையில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். (ச-60)

முல்லைத்தீவில்

# தொலைபேசியில் சேஷ்டை; ஐவருக்கும் மறியல் நீடிப்பு!



மன்னார், நவ.11

முல்லைத்தீவில் தொலைபேசி திருத்தும் கடை ஒன்றில் யுவதி ஒருவரின் தொலைபேசி திருத்துவதற்காக பெற்று அதிலிருந்த புகைப்படங் களைப் பயன்படுத்தி பாலியல் அச்சுறுத்தல் விடுத்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட ஐவருக்கும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினால் கடந்த மாதம் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக் கமைய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு குறித்த தொலைபேசி திருத்தல் நிலையத்தின் உரிமையாளர் உள்ளிட்ட அங்கு பணியாற்றிய 5பேரை கைதுசெய்தனர். அவர்களை முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியபோது கடந்த 7 திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில் மீண்டும் குறித்த 5 பேரும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. (ச-19)



# கசிப்புடன் பெண் கைது!

யாழ்ப்பாணம், நவ.11

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊரெழு மேற்குப் பகுதியில் நீண்டகாலமாக கசிப்புக் காய்ச்சி வந்த பெண்ணொருவர் 5ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்புடன் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய இந்தக் கைது இடம் பெற்றது. மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுதுவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (சு-ரி-27)



# தினம் தெரியுமோ?

**நாட்டிலதான் பதவியளுக்குப் பிடுங்குப்பாடு எண்டால் பள்ளிக்கூடங்களிலையும் இப்ப பிள்ளையளுக்கு மொனிட்டர் பதவி (வகுப்புத் தலைவர்), பிறிபெக்ட் (மாணவதலைவர்) பதவியளைக் குடுக்கிறதிலையும் கடும் அரசியல் நடக்குதாம். இந்த அரசியல் கட்சி அரசியல் இல்லை. தங்களுக்கு அணைவான பிள்ளையளுக்கு மட்டும் இப்பிடி பதவியளைக் குடுக்கிறதும், தங்களுக்கு நெருக்கமில்லாதவையளுக்கு இப்பிடிக் குடுக்காமல் உதாசீனம் செய்யிறதும் கூடிப்போட்டுதாம்.**

**இப்ப வடமராட்சியில ஒரு பெண்கள் பள்ளிக்கூடத்தில பிறிபெக்ட் பிரச்சினை ஒண்டு பத்தியெரியுது. அந்தப் பிள்ளை படிப்பிலையும், இணைப்பாடவிதானங்களிலையும் நல்ல கெட்டிக்காரியாம். ஆனால் அவாவுக்கு மாணவமுதல்வர் பதவியைக் குடுக்கமாட்டம் எண்டு பிரின்சிபல் நிக்கிறாவாம். பிரின்சிபல் சொல்லிறதைதான் நிர்வாகமும் கேக்குது. அதால அந்தப் பிள்ளைக்கு கிடைக்கவேண்டிய கௌரவம் கிடைக்கேலை எண்டு அவான்ர பெற்றோர் எல்லா இடமும் ஏறி இறங்குகினம். எங்க போனாலும் நாங்கள் எடுத்த முடிவை மாத்த மாட்டம் எண்டு பள்ளிக்கூடக்காரர் நிக்கினமாம். 'இப்பிடி பள்ளிக்கூடத்தோட மல்லுக்கட்டுறதை விட வேற நல்ல பள்ளிக்கூடத்தில பிள்ளையைச் சேருங்கோ' எண்டு பிள்ளையின்ர பெற்றோருக்கு அக்கம் பக்கத்தில இருக்கிறவை அட்வைஸ் பண்ணுகினம். எண்டாலும் 'எங்கட பிள்ளை இந்தப் பள்ளிக்கூடத்தைதான் நேசிச்சவள். இந்தப் பள்ளிக்கூடத்துக்காகத்தான் போட்டியளுக்குப் போய் தன்ர பள்ளிக்கூடம் வெல்லவேணும் எண்டு ஓர்மமா நிக்கிறவள். இனி வேற பள்ளிக்கூடத்துக்குப் போய் இந்தப் பள்ளிக்கூடத்துக்கு எதிரா என்னெண்டு போட்டி போடுவாள்? பள்ளிக்கூடக்காரர் என்னவும் செய்யட்டும். அவள் இஞ்ச தான் படிப்பாள்' எண்டு பெற்றாரும் பிள்ளையை மாத்துறேலை எண்டு நிக்கினம்.**

**இந்தப் பள்ளிக்கூடத்தில வேற சில பள்ளிக்கூடங்களிலையும் இந்த மாணவ தலைவர் பிரச்சினையள் திணைக்கள விசாரணை மட்டும் போகுதாம். சில பள்ளிக்கூடங்களில ஆர்ப்பாட்டம் கூட நடந்திருக்குது எண்டால் பாருங்கோவன். இனிமேல் என்னென்ன தகுதியுள்ள ஆக்களை எப்பிடி உந்தப் பதவியளுக்கு செலக்ட் பண்ணுறது எண்டு பொதுவா ஒரு சுற்றறிக்கை விட்டாத்தான் உப்பிடியான சிக்கல்கள் தீரும். இல்லாட்டி பள்ளிக்கூடக்காரர் ஒவ்வொருமுறையும் ஒவ்வொரு ரூல்ஸை இயற்றி பிள்ளையளை பழிவாங்குவினம். இனிமேலாவது பள்ளிக்கூடங்கள் தங்கட வஞ்சத்தை பிள்ளையளில காட்டாமல் இருப்பினமோ?**



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பலவீனமான தேர்தல்!

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் எவ்வளவு தூரம் முக்கியத்துவம் பெறுகின்றதோ, அதேயளவு சமயத்தில் அதைவிடவும் கொண்டாடப்பட வேண்டியது நாடாளுமன்றத் தேர்தல். உலகிலுள்ள அரச தலைவர்களில் இலங்கை ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் உச்சத்தன்மை வாய்ந்தவையாக இருந்தாலும்கூட, நாடாளுமன்றம் மனம் ஒப்பா விடில் ஜனாதிபதியின் திட்டங்களும், நகர்வுகளும் தவிடுபொடிதான். மைத்திரி - ரணிலின் ஆட்சிக் காலம் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. அப்படிப் பட்ட பொதுத்தேர்தலை இலங்கையர்கள் ஆர்வத் துடன் எதிர்கொள்கின்றனரா? என்று கேட்டால் இல்லை என்பதுதான் பதில்.

இம்முறை பொதுத் தேர்தலுக்குரிய மகத்து வத்தை இலங்கையர்கள் வழங்கியதாக இல்லை. 'போகிற போக்கில் ஒரு பொதுத்தேர்தல்' என்ற வாறாகத்தான் பெரும்பாலானவர்கள் இந்தத் தேர் தலை அணுகுவதற்குத் தலைப்பட்டுள்ளனர். 'இலங் கையர்கள் இம்முறை தேர்தலில் ஆர்வமற்று இருக் கின்றனர்' என்று பவ்ரல் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கை, களநிலைவரங்களுக்குக் கச்சிதமாகப் பொருந்துகின்றது.

இம்முறை பொதுத்தேர்தல், தேர்தலுக்கே உரித்தான அம்சங்களை இழந்து - சோபையின்றிக் காணப்படுவதற்கு ஏகப்பட்ட காரணங்கள் அடுக்கப் படுகின்றன. சுயேச்சைக் குழுக்களின் அதீதமான ஆக்கிரமிப்பு, பிரதான கட்சிகளின் அஸ்தமனம், பொருளாதார நலிவுநிலை, தேர்தல் செலவு கணக் கறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய கட்டாயம், மக்கள் மத்தியில் வேரூன்றியுள்ள அரசியல் வெறுப்புணர்வு என்பன இதற்கான காரணங்களாகக் கொள்ளப் படுகின்றன. ஆனால், தேர்தல் பரபரப்பின்மைக்கு எத்தகைய காரணங்களை முன்வைத்தாலும், அதை அப்படியே 'சரியென்று' ஏற்று மனதில் பொருத்தி விட முடியாது. ஏனெனில் அடுத்த ஐந்து ஆண்டு களுக்கு நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகும் காலம் இதுதான். ஆதலால், எஞ்சிய ஓரிரு நாள்கள் இலங்கையர்களுக்குப் விஷப்பரீட்சைக் காலம் என்றும் கொள்ளலாம். எனவே, அரசியல் மீதான வெறுப்புணர்வை - வாக்குகள் மீதான நம் பிக்கையின்மையைக் களைந்து பொதுத் தேர்தலை புதுப்பொலிவுடன் எதிர்கொள்ள நாம் தயாராக வேண்டும்.

உனக்கான அரசியலை நீ பேசவில்லை என்றால், நீ வெறுக்கும் அரசியலால் ஆளப்படுவாய் என்கின் றார் புரட்சியாளரான லெனின். எனவே, விரும் பியோ விரும்பாமலோ ஒவ்வொருவரும் தமக்கான அரசியலைப் பேசிக்கொள்ளவேண்டும். இங்கே அரசியல் பேசுதல் எனப்படுவதற்கு 'ஆர்வத்துடன் இருத்தல்', 'வாக்களித்தல்' என்றும் பொருள். சின் னங்கள் எத்தனை வந்தாலும் உங்கள் எண்ணங் களைச்சீர்ப்படுத்திக் கொள்ளுங்கள். 'என் அரசியலே எனக்கான அரசியல்' என்ற எண்ணம் ஒவ்வொரு வரிடத்திலும் இருந்திருந்தால், இன்று பலவீனமான பொதுத்தேர்தல் ஒன்றை இலங்கை எதிர்கொண்டி ருக்காது. எனவே, எஞ்சிய நாள்களிலாவது உங்கள் அரசியலை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். அரசியல் என்பது அழகான பொதுமொழி. அந்த மொழியை அனைவரும் தெரிந்திருப்பது அவசியம். பரப்புரைகள் தான் எழுச்சியுடன் இல்லையென்றாலும், வாக் களிப்பிலாவது எழுச்சியாக திரள்வதே ஜனநாய கத்துக்கு ஆரோக்கியமானது.




# வடக்கை அழித்தோருக்கு அமைச்சுப்பதவி இல்லை

### தே.மக்கள் சக்தி தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், நவ. 10**

**இலங்கையை ராஜபக்ஷக்கள் அழித்ததைப் போல வடபகுதியை அழித்தவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழுங்கப்படாது என்று தேசிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் பிமல் ரத்நாயக்கா தெரிவித்துள்ளார்.**

மன்னார் நானாட்டான் பிரதேசத்தில் தேசிய மக்கள் சக்தியின் அலுவலகத்தைத் திறந்து வைத்து உரை யாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
போர் முடிந்த காலத்தில் இந்தப் பகுதிகளில் கப்பம் பெற்றவர்களும் ஏழைத் தமிழ், முஸ்லீம் மக்களின் காணிகளை அபகரித்தவர்களும் இப்போது திசை காட்டிக்கு ஆதரவெனத் தெரிவிக்கிறார்கள். இலங் கையை ராஜபக்ஷக்கள் அழித்ததைப் போல வட பகுதியை அவர்கள் அழித்தவர்கள் யாரும் அமைச் சுக்குள் வரமுடியாது.
நவம்பர் 14 க்குப் பிறகு மக்கள் அனைவரும் இணைந்து ஒரு புதிய அரசாங்கத்தை உருவாக்க வேண்டும் - என்றார். (ச-60)

## தொண்டர்களும் தேர்தல் கடமையில்

கொழும்பு, நவ. 10
நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் தேர்தல் கடமைகளில் இம்முறை தேர்தல் உத்தியோகத்தர்களுடன் தொண்டர்களும் கடமையில் ஈடுபடுத் தப்பட்டுள்ளனர். தற்போது இவர்கள் கொழும்பு மாவட்டச்செயலகத்தில் தேர்தல் உத்தியோகத்தர்களுடன் இணைந்து பணியில் ஈடுபட்டுள்ளனர். தேர்தல் தினத்தன்று வாக்குச்சாவடி களிலும் இவர்கள் தேர்தல் பணிக ளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். (ச-6)

## சக்கர நாற்காலிப் பயணி போதையுடன் கைது

கொழும்பு, நவ. 10
கட்டுநாயக்க விமான நிலையத்தில் போதைவஸ்து கடத்த முயன்ற சக்கர நாற்காலி பயணி ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
கடந்த சனிக்கிழமை தாய்லாந்திலிருந்து வந்த மரு தானையைச் சேர்ந்த 58 வயதான பெண்மணியே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். இவரது பொதியை சோதனையிட்ட போது 40 மில்லியன் பெறுமதியான குஷ் போதைப்பொருள் அவரது பொதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. மேலதிக விசார ணைகள் இடம்பெற்று வருகின்றன. (ச-6)

## பாதீட்டுக்கு முன்பு அநுர இந்தியாவுக்கு

கொழும்பு, நவ.11
2025 ஆம் ஆண்டுக்கான பாதீட்டை முன்வைப்பதற்கு முன்னரே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கா டில்லிக்கு செல்லவுள்ளார் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பொதுத்தேர்தல் முடிவடைந்து புதிய அமைச்சரவையை பதவியேற்ற பின்னர், டிசெம்பர் இறுதியில் அல்லது ஜனவரி ஆரம்பத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தியா செல்லவுள்ளார்.
2025 ஆம் ஆண்டுக்கான பாதீடு எதிர்வரும் மார்ச் மாதம் முன்வைக்கப்படவுள்ளது. அதற்கு முன்பதாக தனது முதல் வெளிநாட்டு பயணமாக ஜனாதிபதி இந்தியா செல்லவுள்ளார். (ரி- 45-44)

## கொழும்புக்கு துப்பாக்கிச்சூடு

கொழும்பு, நவ.11
கொழும்பு, தாமரை கோபுரத் துக்கு அருகில் இடம்பெற்ற துப் பாக்கிச் சூட்டில் ஒருவர் காய மடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்தத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை இடம் பெற்றுள்ளது. துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட் டுள்ளார். (ச)

### நாளை

12.11.2024

செவ்வாய்க்கிழமை - ஐப்பசி - 26

சுபநேரம் : 10.36 - 12.06

ராகுகாலம் : 03.06 -04.36

### நாளொரு நல்வார்த்தை

**நீங்கள் வலிமை பொறுமை ஆகியவற்றின் அருமையை உணர்வீகளாயின் மரங்களின் சகவாசத்தை வரவேற்பீர்கள்.**

*- ஹால் போர்லாண்ட் -*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரக் குறைபாடு; வெதுப்பகங்களுக்கு 'சீல்'

மன்னார், நவ. 11

மன்னார் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரிப் பிரிவில் சுகாதாரச் சீர்கேடுகளுடன் பொதுமக்களின் சுகாதாரத்துக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் இயங்கி வந்த இரண்டு வெதுப்பகங்கள் 'சீல்' வைத்து மூடப்பட்டுள்ளன. மன்னார் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் குறித்த வெதுப்பகங்கள் தொடர்பில் பரிசோதிக்கப்பட்டு 12 குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டபோதும் குறித்த வெதுப்பகங்கள் அறிவிப்புகளை மீறி சுகாதாரச் சீர்கேடாக இயங்கிய நிலையில் வெதுப்பகங்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

அதற்கமைய நீதிமன்ற உத்தரவு பெற்று குறித்த வெதுப்பகங்கள் கடந்த வியாழக்கிழமை சீல் வைத்து மூடப்பட்டன. (ச-56)





## மரம் வீழ்ந்ததில் மின் துண்டிப்பு!

கிளிநொச்சி, நவ. 11

கிளிநொச்சி ஏ-35 பிரதான வீதியின் தருமபுரம் மருத்துவமனைக்கு அருகில் வீதியோரமாக நின்ற மரம் கடந்த வெள்ளிக்கிழமை பெய்த கடும் மழை காரணமாக வீதியின் குறுக்கே வீழ்ந்துள்ளது.

மின்கம்பம் மீது குறித்த மரம் வீழ்ந்ததில் சில மணிநேரம் மின்துண்டிப்பு ஏற்பட்டுள்ளதுடன் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த தருமபுரம் பொலிஸாரால் மரத்தை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது. (ச-113)


வீடு வாடகைக்கு உண்டு

யாழ் பிரதான வீதியில் நிறுவனங்களுக்கு உகந்த வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
077 775 9235



முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 . 09 . 1949

மறைவு 24 . 10 . 2023



(CS/56521) J-1

நீர்வேலி மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் மகேஸ்வரி தனபாலசிங்கம்

எங்கள் குடும்பத்தின் குல விளக்காகி,
ஒளி தந்து எம்மைக் காத்த எங்கள் அம்மா!
ஆண்டொன்று கடந்ததம்மா,
உம் பிரிவால் கணப்பொழுதும்
நாம் வருந்துகிறோம், அம்மா!
மீண்டுமுமைக் காணவென மனம் ஏங்குகிறது
எங்கள் மனங்களில் என்றும்
உங்கள் நினைவுகள் அம்மா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

என்றும் உம் நினைவில் வாழ்ந்துகொண்டிருக்கும்

நீர்வேலி மேற்கு,
நீர்வேலி.

(CS/56648) J-1

குடும்பத்தினர்



நான்காவது சிரார்த்த தினம்

தோற்றம் 10 . 05 . 1942

மறைவு 26 . 10 . 2020



அமரர் கிருஸ்ணபிள்ளை அருணகிரிராசா

திதி: வளர்பிறை தசமி (11.11.2024)

காலம் கடந்து சென்றாலும்
வாழ்ந்தும் வாழ வைத்த தெய்வமே
நின் நினைவு நெஞ்சை விட்டு நீங்கா

தென்றலின் பூங் கரம் தீண்டிடும் போதும்
சூரிய ஒளி தோன்றிடும் போதும்
மழலையின் தேன்மொழி செவியுறும் போதும்
நின் நினைவுகள் எம்முடன் வாழ்ந்திடும்

உங்கள் ஆத்மா சாந்தியடைக

என்றும் உங்கள் நினைவுகளுடன்

(CS 29231)(N-1)

குடும்பத்தினர்



ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 25.07.1968

உதிர்வு 18.10.2018

அமரர் பொன்னம்பலம் கஜேந்திரன்

(கரைதுறைப் பற்று - ப.நோ.கூ.சங்கம்.கிளை முகாமையாளர்)

திதி: ஐப்பசி வளர்பிறை தசமி (11.11.2024)

ஆண்டுகள் ஆறு கடந்து சென்றாலும்
உங்கள் நினைவுகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன்.

பூதன் வயல் சந்தி,
குமாரபுரம், முள்ளியவளை.

(cs 26697) (N.1)

அன்பு மனைவி
க.கிருஷ்ணபவானி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீண்ட வரலாற்றுப் பின்னணியை கொண்ட யாழ் பல்கலையில் இருந்து ஒரு குரல் தமிழரின் குரலாக ஒலிக்கட்டும்!!



**தமிழ் தேசியத்தின் இருப்பிற்காக மாணவர்களாகிய நாங்கள் செய்த பணிகள்**

1. இனப்படுகொலை செய்யப்பட்ட மக்களின் நினைவாக யாழ்களைக் கழகத்தில் ஓர் முள்ளிவாய்க்கால் நினைவாலயத்தை நிறுவினோம்.
2. சிறைச்சாலைகளிலே வாடும் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலிருந்து அனுராதபுரம் சிறைச்சாலை வரை கால்நடையாக நடைபயண போராட்டம் செய்து அரசியல் கைதிகளின் பிரச்சினையை சர்வதேசத்திற்கு எடுத்துச் சென்றோம்.
3. தமிழ் மக்களின் போராட்ட நியாயங்களை பிரதிபலிக்கும் வரலாற்று அடையாளங்களை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்து செல்வதற்காக பொங்கு தமிழ் பிரகடனத்தை ஓர் நினைவுத்தூபியில் உருவாக்கி கல்வெட்டில் செதுக்கி காலத்தால் அழியாத ஒன்றாக உருவாக்கினோம்.
4. முள்ளிவாய்க்கால் பேரவல நினைவேத்தல் நிகழ்வில் கூறு கூறாக பிரிந்து நின்று ஆங்காங்கே விளக்கேற்றியவர்களை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து ஒற்றுமையான ஒருங்கிணைந்த நினைவேர்த்தல் ஒன்றை 2018 காலப்பகுதியில் செய்து முடித்தோம் அது இன்றும் தொடர்கிறது.
5. அதன் தொடர்ச்சியாக திசை வழி தெரியாமல் தடுமாறி செல்லும் எங்கள் தமிழ் இளைஞர்களை ஒருங்கிணைக்க உங்கள் முன் ஆணை கேட்டு இந்தப் பாராளுமன்றத் தேர்தலில் சுயேட்சை குழு 13 இல் வந்திருக்கின்றோம் எங்கள் கரங்களை பலப்படுத்த கரும்பலகை சின்னத்திற்கு வாக்களித்து இந்த இளைய சமுதாயத்தை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று மிகவும் பணிவன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

## கி.கிருஷ்ணமீனன் 1

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் மாணவர் ஒன்றியத் தலைவர்

**கறைபடியாத கரங்களை கொண்ட**

**மாற்றத்திற்கான தமிழ் தேசிய இளைஞர் அணி**






5 மசனையா தர்சிகன்

யாழ்.பல்கலைக்கழக மாணவன், பௌதிகவியல் ஆசிரியர்

# வளமான வாழ்வுக்கு வழிகாட்டி... நம் திசைகாட்டி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சங்கீதப் போட்டியில் வாழ்வக மாணவி சாதனை

யாழ்ப்பாணம், நவ. 11
அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கர்நாடக சங்கீதப் போட்டியில் யாழ்.இராமநாதன் கல்லூரியில் கல்வி பயிலும் சுன்னாகம் வாழ்வக மாணவி ரெஜிறொபின்ஸ் கீர்த்தனா முதலிடம் பெற்றுச் சாதித்துள்ளார். (25-66)





# அமரர் ரவிராஜ் நினைவுதினம்

யாழ்ப்பாணம், நவ. 11
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், சட்டத்தரணியுமான அமரர் நடராசா ரவிராஜின் 18 ஆவது நினைவு தினம் யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் அமைந்துள்ள அன்னாரது நினைவுச் சிலையருகில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.
அமரர் ரவிராஜின் பாரியார் சசிகலா ரவிராஜ், ஈகைச் சுடர் ஏற்றி நினைவஞ்சலி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து ரவிராஜின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.
அமரர் நடராஜா ரவிராஜ், 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10ஆம் திகதி கொழும்பு நாரஹேன்பிட்டியவிலுள்ள அவரது இல்லத்தில் இருந்து அலுவலகத்துக்குச் செல்லும் வழியில் ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-27-6)



# கொக்குவிலில் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ. 11
கொக்குவில் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று திங்கட்கிழமை காலை 08.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் பெ.வசந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத் தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈஸ்வரநாதபிள்ளை குமரன், ஊர்காவற்துறைப் பிரதேச மருத்துவமனையின் மருத்துவ அதிகாரி மருத்துவ கலாநிதி தணிகாசலம் மயூரன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (ச-66)



# 'வுஷு' விளையாட்டு மன்னாரில் அறிமுகம்

மன்னார், நவ.11
மன்னார் மாவட்டத்தில் முதல்முறையாக 'வுஷு' விளையாட்டு அறிமுகம் செய்யப்பட்டு மூன்று நாள் பயிற்சி முகாம் நடத்தப்பட்டுள்ளது.
மன்னார் பொது விளையாட்டு மைதான உள்ளக அரங்கில் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் நேற்று ஞாயிற்றுக்கிழமை வரை இந்த பயிற்சி முகாம் இடம்பெற்றது.
குறித்த பயிற்சி முகாமில் மாவட்டத்தின் அனைத்து பிரதேசங்களிலிருந்தும் 50 வீர, வீராங்கனைகள் கலந்து கொண்டனர். குறித்த விளையாட்டு மாவட்டச் செயலரின் வழிகாட்டலோடு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் நிதிப் பங்களிப்புடன் நடைபெற்றது. (ச-56)

# வடக்கில் ஆற்றிய பணி பொன்னான காலமே!

## பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த உவகை



மன்னார், நவ.11
நான் 9 மாதகாலம் வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபராக கடமை புரிந்தேன். அந்தக் காலத்தை ஒரு பொன்னான காலமாக நான் நினைவில் கொள்கின்றேன். எனக்குக் கீழ் இருக்கின்ற பொலிஸ் அதிகாரிகளை பயன்படுத்தி மிக சிறப்பான சேவையை நாட்டுக்கு ஆற்றுவேன்- இவ்வாறு இலங்கையின் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.
சுன்னாகம் பொலிஸ் நிலையத்தை நேற்றுமுன்தினம் திறந்து வைத்த பின்னர் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாங்கள் தவறான காரியங்களில் ஈடுபட்டால் அது சம்பந்தமாகவும், நற்காரியங்கள் செய்தால் அதற்கான பிரதிபலிப்புகள் கிடைப்பது இந்த சமூகத்தில் இருந்தே. சட்டத்தைச் சரியாக நடைமுறைப்படுத்தவில்லை என்றால் அது எமது இயலாமை அல்லது தவறு என்று தான் கூறலாம். சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இருக்கின்றதிணைக்களத்தில் உள்ளவர்கள் விடுகின்ற பிழைகள் என அவற்றைக் கூறலாம். எந்த ஓர் எதிர்ப்புகளும் இல்லாமல் சட்டத்தை நிறைவேற்றக்கூடிய ஒரு சூழல் இப்போது எங்களுக்கு இருக்கின்றது - என்றார். (ச-27)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தடைப்பட்டு வந்த தெய்வப் பிரார்த்தனைகள் நல்லபடி நிறைவேறும். அனுகூலமாக முடியும். சகோதரர்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**இடபம்:** உடல் நலனில் கவனம் செலுத்தவேண்டிய நாள். சகோதரர்களிடம் அனுசரணையாக நடந்து கொள்வது நல்லது. சிலருக்கு திடீர் பணவரவுடன் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக் கூடும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** இன்று குடும்பத்தில் சிறுசிறு பிரச்னைகள் ஏற்பட்டாலும், பாதிப்பு இருக்காது. உறவினர்கள் வரு கையால் மகிழ்ச்சி உண்டாகும். தாய்வழியில் திடீர் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செல வாகவே இருக்கும்.

**கடகம்:** திடீர் செலவுகளும் ஏற்படக்கூடும். தாய்மாமன் வகையில் நீண்டநாளாக எதிர்பார்த்த உதவி இன்று கிடைக்கக்கூடும். வாழ்க்கைத்துணை வழியில் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும்.

**சிம்மம் :** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்க அதிகாரிகளால் ஆதாயம் உண்டாகும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**கன்னி:** உற்சாகமான நாள். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு உறவினர் அல்லது நண்பர்கள் மூலம் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை.

**துலாம்:** மனதில் வீண் குழப்பங்கள் தோன்றி மறையும். ஆனால், புதிய முயற்சி சாதகமாக முடியும். குலதெய்வ பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். தாய்வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம் :** மனதில் உற்சாகம் ஊற்றெடுக்கும். தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** புதிய முயற்சியில் ஈடுபடுவதை தவிர்க்கவும். காரியங்கள் இழுபறியாக முடியும். தேவையான பணம் இருந்தாலும், எதிர்பாராத செலவுகளால் மனச்சஞ்சலம் உண்டாகும். சகோதர வகையில் வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கி, அந்நியோன் யம் ஏற்படும். முக்கிய முடிவில் வாழ்க்கைத்துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

**கும்பம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரைவதுடன், சிலர் கடன் வாங்கவும் நேரிடும். சிலருக்கு வெளியூர்ப் பயணம் செல்ல நேரிடும். தாயின் உடல் நலனில் கவனம் தேவை.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுக்கும் பொருள் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத் துணைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே சிறுசிறு வாக்குவாதம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னைத் தோற்கடிக்க தமிழரசினுள் குழிபறிப்பு!

## சிறீதரன் ஆதங்கம்



யாழ்ப்பாணம், நவ. 11

என்னைத் திட்டமிட்டு தோற்கடிப்பதற்கு எமது கட்சிக்குள் இருந்தே மும்முனை கூட்டுச்சதி மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் மக்கள் ஆணை பெற்று மீண்டும் தமிழரசுக் கட்சியின் தலைவராகச் செயற்படுவேன் என்று தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற முன் னாள் உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒட்டுமொத்தத்தில் இந்த தேர்தலுக்கான நீதிபதிகளாக தமிழர்களே அமைவதால் அவர்களுடைய வாக்குகள் சிதறிப்போகாமல் அது தமிழ்த் தேசியத்துக்கான தமிழ்த் தேசியத்தை பேசுகின்றவர்களுக்கான வாக்காக மாற வேண்டும்.

மதுபானசாலைக்காக சிபாரிசு செய்ததாக போலி ஆவணங்களை தயாரித்து எனக்கு எதிராக பொய்யான வதந்திகளைப் பரப்புவது கூட்டுச் சதியாகும்.

தமிழரசு கட்சியின் தலைவராக நான் தெரிவு செய்யப்பட்ட போது வடக்கு-கிழக்கு, மலையகம், கொழும்பு மற்றும் புலம்பெயர் தேசங்களிலும் ஓர் எழுச்சி ஏற்பட்டிருந்தது. வழக்குப் போட்டு தடுக்காது இருந்திருந்தால் தமிழரசுக் கட்சி கூடிய ஆசனங்களை அலுங்கல் குலுங்கல் இல்லாமல் எடுத்திருக்க முடியும்.

தங்களுடைய சுயநலத்துக்காகவே எங்களுடைய கட்சியை சேர்ந்தவர்கள். தங்களுடைய பதவி மோகங்களுக்காக தமிழ்த் தேசியத்தை அழித்து தமிழ் மக்களை வேறு திசைக்கு கொண்டு செல்வதற்காக அவர்கள் செய்த கைங்கரியம் தான் வழக்கு. அதன் காரணமாக இடைக்காலத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இடைக் காலத் தடை எப்போது விலக்கப்படுகிறதோ அப்போது நான் தலைவராக பொறுப்பெடுப்பேன்.

தமிழர்களை ஓரணியாக ஒன்றாக்கி தமிழ்த் தேசிய பரப்பில் இயங்கும் எல்லாக் கட்சிகளையும் ஒரு பாதையில் கொண்டு வந்து தேசிய விடுதலைக்கான இயக்கத்தை அமைப்பதற்கு என்னாலான முழு முயற்சிகளை எடுப்பேன்- என்றார்.

(ச-100)




# தமிழர்களுக்கான தீர்வு சமஷ்டியே!

## சுகாஷ் ஆணித்தரம்



யாழ்ப்பாணம், நவ.11

சமஷ்டித் தீர்வே தமிழர்களுக்கான தீர்வு என்பதில் உறுதியாகக் கொண்டுள்ள கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை ஆதரிப்பதற்கு வடக்கு-கிழக்கு மக்கள் திரண்டுவிட்டார்கள்.

-இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளரும் வேட்பாளருமான சுகாஷ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒற்றையாட்சியையும், 13ஆவது சீர்திருத்தத்தையும் நிராகரித்து தமிழ்த் தேசியத்தினுடைய அபிலாசைகளை முன்னிறுத்தி, தமிழர்களுடைய தேசம், சுய நிர்ணய உரிமை, இறைமை ஆகியவற்றை உறுதிப்படுத்துவோம். நடைபெறவுள்ள தேர்தலில் தமிழ்த் தேசமான வடக்கு- கிழக்கில் அதிகமான வாக்குகளைப் பெற்று அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்களோடு த.தே.ம.முன்னணி தமிழ்த் தேசியத்தில் தலைமைச் சக்தியாக மாறவுள்ளது. மக்களின் உரிமைக்காகவும், தமிழ்த் தேசிய மக்களின் விடுதலைக்காகவும் குரல் கொடுத்து, சுயதொழில் வாய்ப்புகளை வழங்கி, மாவீரர் குடும்பங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, வறுமையற்ற கல்விமுறையை பெற்றுக் கொடுப்போம் - என்றார்.

(ரி-45)



ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்பாளரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் வவுனியா நகரபகுதியில் நேற்றுமுன்தினம் பிரசாரத்தில் ஈடுபட்டார். இதன்போது கூட்டணியின் வேட்பாளர் செந்தில்நாதன் மயூரன் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள், பெருமளவான தொண்டர்கள் பங்கெடுத்திருந்தனர். (ச-110)

# வாக்குகளை சிதறடிக்காதீர்

**வேட்பாளர் சத்தியலிங்கம் தெரிவிப்பு**

எதிர்வரும் நாடாளுமன்றத்தேர்தலில் இனவிகிதாசார அடிப்படையில் தெரிவுகள் அமையாவிடில் நாங்கள் ஏற்கனவே எதிர்கொள்கின்ற குடியேற்றம், காணிஅபகரிப்பு, போன்ற அடக்குமுறை செயற்பாடுகளைத் தடுக்க முடியாமல் போகும் என்று முன்னாள் வடமாகாண சுகாதார அமைச்சரும் வன்னி மாவட்ட தமிழரசுக்கட்சியின் வேட்பாளருமான ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார். வாக்குகளைச் சிதறடிப்பதற்காக பல கட்சிகள் குழுக்கள் களத்தில் இறங்கியுள்ளன. எனவே இந்த மண்ணிலே இயங்காமல் புதிது புதிதாகத் தேர்தல் காலங்களில் வருகின்ற கட்சிகளுக்கு வாக்குகளைச் செலுத்தி வாக்குப்பலத்தை சிதறடிக்காதீர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-110)



நல்லூர் பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினரால் தையல் தொழில் முயற்சியில் ஈடுபடும் பெண்களுக்கான திறன்விருத்திப் பயிற்சி நெறி ஜே94 கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள அரியாலை மத்தி வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. (25, 66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# 'ஸ்வாஹிமானி' விருதுகள் யாழ்.மாவட்டம் சாதனை!

யாழ்ப்பாணம், நவ. 11

**சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 'ஸ்வாஹிமானி' 2024' தேசிய விருதுகளில் 3 விருதுகளை யாழ்.மாவட்டம் தன தாக்கி சாதனை படைத்துள்ளது.**

இந்த நிகழ்வு சுகுறுபாய கட்டடத்தின் 19 ஆவது மாடி யில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

நல்லூர்ப் பிரதேச வழிகாட்டல் குழு முதலாம் இடத்தை யும், மாற்றுவலுவுடையோர் புனர்வாழ்வு நிறுவனம் இரண்டாம் இடத்தையும், சிறந்த காட்சிப்படுத்தும் மட் டத்திலான படைப்பாளியாக கோப்பாய் பிரதேசத்தை சேர்ந்த த.சுரேஸ்குமார் இரண்டாம் இடத்தையும் பெற்று விருதுகளை தனதாக்கின.

நிகழ்வில் பிரதம விருந்தினராக புத்தசாசன சமய, கலா சார அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூக பாது காப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ஆரியரத்னவும், அழைப்பாளராக யாழ்.பதில் மாவட்டச் செயலர் ம. பிரதீபன் கலந்துகொண்ட னர். (ச-25, 27,66)



# வீதியில் கொட்டப்படும் கழிவுகளால் சீர்கேடு!

யாழ்ப்பாணம், நவ. 11

பருத்தித்துறை பிரதேசசபைக்குட்பட்ட புலோலி பிர தேசத்தில் பருத்தித்துறை யாழ்ப்பாணம் பிரதான வீதியோரமாக கொட்டப்பட்டு வரும் கழிவுப் பொருள் களால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவதுடன், போக்கு வரத்துக்கு இடையூறாகவும் அமைவதாக பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பிரதான வீதியோரமாக பாதுகாப்பற்ற முறையில் கொட்டப்பட்டுவரும் சமையலறை கழிவுகள் உள் ளிட்ட பிளாஸ்ரிக் கழிவுப் பொருட்கள்,காகம், நாய் என்பனவற்றால் வீதியெங்கும் பரவுகின்றன.

இதனால் தினமும் அவ்வீதியூடாக பயணிக்கும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அரச அலு வலர்கள் உள்ளிட்டோர் பல்வேறு அசௌகரியங் களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். எனவே பாதுகாப்பான முறையில் கழிவுகளை சேகரிக்கும் கழிவகற்றல் கொள்கலன்களை அந்தப் பகுதியில் வைப்பதற்கு சம்பந்தப்பட்ட சுகாதாரப் பிரிவு அதி காரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-25, 100)





# யாழில் 3 குடும்பங்கள் மழையால் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ்ப்பாணத்தில் மழையால் மூன்று குடும்பங் களைச் சேர்ந்த 13 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், பருத்தித்துறை பிரதேச செய லர் பிரிவுக்குட்பட்ட ஜே/401 கிராம சேவகர் பிரி வில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நால்வரும், கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/356 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஐவரும், வேலணை பிர தேச செயலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நால்வரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் வீட்டின் மீது மரம் முறிந்து விழுந்ததில் வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-4527)

பூநகரி சமூக அபிவிருத்தி சங்கம் கனடா அமைப்பினரால் கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலயத்தில் இந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. பரீட்சையில் 9ஏ சித்திபெற்ற இரு மாணவர்களுக்கான பணப்பரிசு மற்றும் கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. அமைப்பின் முகாமைத்துவ இயக்குநர் எஸ். அரவிந்தன்,அதிபர் ப.ஆனந்தராசா, உதவி அதிபர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ச-159)





யாழ்.கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தி யாசாலையின் தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வு அதிபர் திருமதி மைதிலி ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் பாடசாலையின் அமரர். கந் தையா ஞாபகார்த்த மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் கொக்குவில் பொதுநூலக நூலகர் திருமதி நிஷாந்தினி சிவசுதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். (ச-25-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கௌரவிப்பு

மன்னார், நவ.11
தேசியமட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் மன்னார் மாவட்டத்தில் முதல் தடவையாக தங்கப் பதக்கம் பெற்ற முதல் வீராங்கனையான மன்.தோட்டவெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவி ஏ.யதுர்சிக்கா, மற்றும் வடமாகாண மெய்வல்லுநர் தடகளப் போட்டியில் சாதனை படைத்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு தோட்டவெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் தலைமையில் மன்னாரில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப், மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் ஜி.டி.தேவராஜ், விருந்தினர்களாக அருட்தந்தை தமிழ் நேசன் அடிகளார், அருட்தந்தை எம்.ஜெயபாலன் அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டனர். (45-56)



சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பிரதி அதிபரும் ஓவியருமான சி.சந்திரசுபநேமியின் சித்திரக் கண்காட்சி சுன்னாகம் பொதுநூலகத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் மாணவர்கள், பொதுமக்கள், வாசகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-159)



# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ. 11
அராலி இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா கல்லூரியின் முதல்வர் கு.பாலமுருகன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.
நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். தேசிய கல்வியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் பா.தனபாலன், சிறப்பு விருந்தினராக சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சூ.நொபேட் உதயகுமார், விருந்தினர்களாக வேல்ட் விஷன் நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் எக்ஸ்.அஞ்சலிற்றோ மற்றும் பாரி அறக்கட்டளையின் தலைவர் ச.நிகேஷ் உள்ளிட்டோருடன் ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-25,27)



# பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.11
கைதடி குருசாமி வித்தியாலயத்தின் பரிசளிப்பு நிகழ்வு அதிபர் ச.அகிலன் தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.
நிகழ்வில் பிரதமவிருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கணிதபாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.நவநீதன், சிறப்பு விருந்தினராக கைதடி குருசாமி வித்தியாலய ஓய்வு நிலை ஆசிரியர் திருமதி இந்திராதேவி சிவகுருநாதன், விருந்தினராக பழைய மாணவியும், அப்பாக்குட்டி நம்பிக்கை நிதிய உறுப்பினருமான திருமதி உதயயோகேஸ்வரி ராஜ்குமார், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ச-45-159)



# திறப்புவிழா

யாழ்ப்பாணம், நவ.11
சுன்னாகம் பொலிஸ் நிலையத்தின் புதிய அலுவலகம் இலங்கை பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவால் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.
சுன்னாகம் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி புரொடெளஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கையின் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய கலந்துகொண்டார்.
நிகழ்வில் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தனபால, யாழ். மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் காலிங்க ஜயசிங்க, யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லூசான் சூரிய பண்டார, பொலிஸ் உயர் அதிகாரிகள், சுன்னாகம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (45-27)



சங்கானைப் பிரதேச கலைஞர்களுக்கான தேசிய கலைஞர் அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. சங்கானைப் பிரதேச செயலகப் பிரிவிலிருந்து ஏழு கலைஞர்கள் அடையாள அட்டையைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ச-25, 66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நானாட்டான் மேய்ச்சல் தரைக்கு தீர்வளிக்காவிடின் போராடுவோம்

## கால்நடைவளர்ப்பார் தெரிவிப்பு

மன்னார், நவ.11

நானாட்டான் பிரதேச கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரை விவகாரம் உரிய தீர்வு கிடைக்காதுவிட்டால் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று நானாட்டான் கால்நடை வளர்ப்பாளர் கூட்டுறவுச் சங்க பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நானாட்டான் பிரதேச கால்நடை வளர்ப்பாளர்களுக்கு மேய்ச்சல் தரவைக்கு என ஒதுக்கப்பட்ட கட்டுக்கரைக்குளம் புல்லறுத்தான் கண்டல் பகுதியில் சிலர் அடாத்தாக விவசாயச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட கால்நடை வளர்ப்பாளர்கள் மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும் இதுவரை எவ்வித தீர்வு கிடைக்கவில்லை. எதிர்வரும் 20 ஆம் திகதி அனைத்து திணைக்களங்களையும் அழைத்து தீர்மானம் ஒன்றை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார். மேய்ச்சல் தரைக்கான நிரந்தரத் தீர்வு கிடைக்காது விட்டால் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக மேற்கொள்வோம் - என்றார். (ச-56)

# ஐஸ் போதையுடன் அதிகாரி கைது!

கொழும்பு, நவ.11

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்கு விற்பனை செய்வதற்காக ஐஸ் போதைப்பொருளை எடுத்துச் சென்ற சிறைச்சாலை அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொரளை பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு விளக்கமறியலில் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின்படி மேற்கொண்ட விசாரணையில் இவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர், இரண்டு வருடங்கள் மற்றும் ஒன்பது மாதங்களுக்கு முன்னர் பணிக்காக வந்திருந்த 35 வயதுடையவர் என்றும், கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (எ-இ)

# ஐஸ் வைத்திருந்த சந்தேகநபர் கைது

கொழும்பு, நவ.11

சப்புகஸ்கந்த பொலிஸ் பிரிவில் உள்ள சிறிமங்கல சந்தியில் ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

சப்புகஸ்கந்த பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவுக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து, மேற்கொண்ட சுற்றிவளைப்பிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் இருந்து 10 கிராம் 540 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.



(எ-இ)

# மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 06 . 1938



மறைவு 10 . 11 . 2024

## மனுவேற்பிள்ளை அருளப்பு

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மேற்கை வசிப்பிடமாவும் கொண்ட மனுவேற்பிள்ளை அருளப்பு நேற்று (10.11.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
**அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS/56650) N-1

# நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம்

## பெறுகைகளுக்கான அழைப்பு

1. தலைவர். வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்கள பெறுகைக் குழுவினால் கீழ்வரும் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான பொருட்களை வழங்குவதற்குத் தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 | 09 |
|---|---|---|---|---|---|---|---|---|
| Lot No | Bid Number | Item | Qty | Bid Security Amount | Bid document Issue | Pre bid Meeting | Bid closing/ Bid Opening | Non refundable fees |
| 01 | NP/30/02/04/PSDG/ Office equipment/2024 | Desktop Computer | 12 | 175,000.00 | From 11.11.2024 to 25.11.2024 | 19.11.2024 11.30 AM | 26.11.2024 11.00 AM | 5,000.00 |
| | | UPS | 12 | | | | | |
| | | Laptop Computer | 13 | | | | | |
| | | Online conference Electronic system with Projector | 01 | | | | | |
| | | UPS 3KV | 01 | | | | | |
| | | Colour Printer | 01 | | | | | |
| | | Photocopier | 06 | | | | | |

2. கேள்வி கோரலானது தேசிய போட்டி விலைக் கேள்வி முறைப்படி மேற்கொள்ளப்படும்.
3. வெற்றிகரமான கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் இடம்பெற்றிருத்தலாகாது என்பதுடன் இலங்கைப் பிரஜையாக அல்லது தனிப்பட்டவராகவோ இருப்பதோடு கேள்விதாரர் மேற்குறிப்பிடப்பட்ட பொருட்களை வழங்குவதற்குரிய தான வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. கேள்விதாரர் குறிப்பிட்ட துறையில் இலங்கையில் ஆகக்குறைந்தது மூன்று வருடங்கள் அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.இத் தகைமையினை வியாபாரப் பதிவுச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை ஆணையாளர், வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், மீனாட்சிஅமமன் வீதி, பண்ணை,யாழ்ப்பாணம் எனும் முகவரியில் வேலை நாட்களில் அட்டவணையின் பிரிவு 6 இல் காட்டப்பட்ட திகதிகளில் காலை 09.00 மணி தொடக்கம் மாலை 15.00 மணி வரையான காலப்பகுதியில் வியாபார பதிவுச்சான்றிதழின் பிரதி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக அட்டவணையின் பிரிவு 9 இல் காட்டப்பட்ட தொகையினை இனை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை **ஆணையாளர், வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் . மீனாட்சி அமமன் வீதி, பண்ணை,யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம் . தொலைபேசி இல:- 021 222 4782 தொலைநகல்:- 021 205 7103
7. மேலதிக தகவல்கள் பகுதி 2 - கேள்வித் தரவில் வழங்கப்பட்டுள்ளன.
8. கேள்வி ஆவணங்கள் அட்டவணையின் பிரிவு 8 இல் காட்டப்பட்டவாறு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
9. பொறியிடப்பட்ட கேள்வி ஆவணங்கள் கீழ்க் குறிப்பிட்ட முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாக சமர்ப்பிக்கப்பட வேண்டும் அல்லது திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியினுள் இடப்படல் வேண்டும். கடித உறையின் மேற்பக்கத்தில் பெறுகை இலக்கம் கட்டாயம் குறிப்பிடப்படவேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் அட்டவணையின் பிரிவு 8 இல் காட்டப்பட்ட திகதி, நேரத்தில் கேள்விதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும்.
10. சகல கேள்விகளுடனும் கேள்வி ஆவணத்தில் குறிப்பிட்டதற்கிணங்க (அட்டவணையின் பிரிவு 5 இல் காட்டப்பட்டவாறு) பொருத்தமான "கேள்விப்பிணை" ஒன்று இணைக்கப்படல் வேண்டும். கேள்விப்பிணை சமர்ப்பிக்கப்படாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
11. பெறுகை முன்ஆயத்தக் கூட்டம் அட்டவணையின் பிரிவு 7 இல் காட்டப்பட்டவாறு மீனாட்சிஅமமன் வீதி, பண்ணை,யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள எமது திணைக்களத்தில் நடைபெறும்.
12. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைகேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைகள் குழு(பெரியது),**
**வட மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும்**
**சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் - வ.மா**
**மீனாட்சி அம்மன் வீதி,**
**பண்ணை, யாழ்ப்பாணம்.**

(cr.43635) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தித்து நிதானித்து தமிழர்கள் வாக்குரிமையை பயன்படுத்துக

## இலங்கை மெதடிஸ்த திருச்சபை வேண்டுகோள்

தேர்தலில் வாக்களிக்கின்றபோது மிகவும் சிந்தித்து நிதானித்து மிகப் பொறுப்புணர்வுடனும் இதய சுத்தியுடனும் வாக்குரிமையைப் பயன்படுத்தி சனநாயக வரலாற்று கடமையை நிறைவேற்ற வேண்டும் என்று அன்புரிமையுடன் கோருகின்றோம் என இலங்கை மெதடிஸ்த திருச்சபை வடக்கு - கிழக்கு திருமாவட்ட அவையின் நீதிக்கும் சமாதானத்துக்குமான பணிக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அந்தக் குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை தேசத்தில் மீண்டுமொரு நாடளுமன்றத் தேர்தலை எதிர்கொள்கின்றோம். வடக்கு - கிழக்கு வாழ் தமிழர் தேசமாக கடந்த 75 வருட வரலாற்றில் எமது மக்களின் வாழ்வியல் பல்வேறுபட்ட அடக்குமுறைகளையும் துன்பங்களும் துயரங்களும் உயிர் உடைமை இழப்புகளையும் சந்தித்து எதுவித தீர்வுகளையோ நீதியையோ பெறாது ஒரு தொடர் கொடும் துன்பியல் வரலாறாக தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் மீண்டும் ஒரு நாடாளுமன்றத் தேர்தலை தமிழர் தேசம் சந்திக்கின்றது.

தீமையும் கொடுங்கோன்மையும் நிறைந்த சூழலில் நீதி, உண்மை, சமாதானம், சமத்துவம், சகோரத்துவம், சுதந்திரம் மானிடநேயம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட புதிய கால சாரத்தை உருவாக்குவதும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கு இறைவாக்குரை பணியாற்றுவதும் இலங்கைமெதடிஸ்ததிருச்சபையின் வடக்கு - கிழக்கு திருமாவட்ட அவையாகிய எமது தலயாய பொறுப்பாகும்.

தமிழினத்தின் தொடர் கொடும் துன்பியலைத்துடைத்து இனத்தின் விடிவுக்காவும் நியாயமிக்க அரசியல் தீர்வுக்காகவும் நீதி நிலைநாட்டப்பட அர்பணிப்புடனும் செயற்பட கூடியவர்களையும் பதவிக்காகவோ பணத்துக்காகவோ சுயலாபத்துக்காகவோ சோரம் போகாதவர்களையும் ஊழல், வன்முறை, கொலை, காலாசார பின்னணியற்றவர்களையும் தெரிவு செய்ய வாக்குரிமையைப் பயன்படுத்த வேண்டும் - என்றுள்ளது. (எ-இ)

### அரசியல்...

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவசாயம் செய்யுங்கள். நியாயமான விலை கொடுக்க நாம் நடவடிக்கை எடுப்போம். உங்களுக்குச் சொந்தமான கடல் வளம் முற்றிலும் அழிக்கப்பட்டு சட்டவிரோதமாக இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுகிறார்கள். எமது கடலில் எமது மக்கள் மீன் பிடிப்பதை நாம் உறுதி செய்வோம். யாரும் அழிப்பதற்கு இடமளிக்கமாட்டோம். தற்போதும் மூடியிருந்த பாதையை திறந்தோம். அதுக்கு திறப்பு விழா வைத்தோமா? திறப்பதற்கு வைபவங்கள் தேவையா? அது மக்களின் உரிமை. வேறு யாரும் ஜனாதிபதியாக இருந்திருந்தால் மூடியவரே விழா வைத்து திறந்திருப்பார்.

படிப்படியாக உங்கள் காணிகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். சிறையில் சிலர் இருக்கிறார்கள். அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். சுதந்திரமாக வாழ அனைவருக்கும் உரிமை உண்டு. அப்படி ஒரு நாடு தேவை இல்லையா?

சீன அரசாங்கத்தால் அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் சீருடை இலவசமாக வழங்கப்படும். அடுத்த வருடம் பாடசாலை தவணை ஆரம்பிக்கும்போது பாடசாலை உபகரணங்கள், புத்தகங்கள் வாங்க நிதிஉதவி வழங்கப்படும்.

போரின் பின்னர் படிப்படியாக வடக்கில் போதைப்பொருட்களுக்கு இளைஞர்கள் அடிமையாகின்றனர். கேரளக் கஞ்சா போதைப்பொருள் வடக்கில் மிக வேகமாகப் பரவுகிறது. போதைப் பொருளில் இருந்து யாழ்ப்பாணத்தை மீட்டெடுப்போம். இந்த போதைப்பொருளுக்கு பின்னால் அரசியல்வாதிகள் உள்ளனர். அதை நிறுத்தி மாற்ற வேண்டும். அது சவால். வெற்றிகரமாக அதை எதிர்கொள்வோம்.

இரசாயன பொருள்களை உற்பத்தி செய்ய பரந்தன் இரசாயன தொழிற்சாலையை மீள ஆரம்பிப்போம். சிமெந்து தொழிற்சாலை, வாழைச்சேனை தொழிற்சாலை ஆகிய புதிய தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படும். வடக்கு மாகாண மக்களின் பொருளாதாரத்தை வளர்க்க எம்மால் நடவடிக்கை எடுக்கப்படும்.

அடுத்த வருடம் மாகாணசபைத் தேர்தலை நடத்துவோம். உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவோம். அரசியல் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவோம். புதிய அரசியல் தலைவர்களை நாம் உருவாக்குவோம்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறிய பலரும் வெளிநாட்டில் வியாபாரிகளாக, கல்விமான்களாக, ஆராய்ச்சியாளர்களாக உள்ளனர்.

யாழ்ப்பாணத்தை கட்டியெழுப்ப நீங்கள் யோசிப்பீர்கள்தானே? உங்கள் அறிவை எடுத்துக் கொண்டு யாழ்ப்பாணத்துக்கு வாருங்கள். உங்கள் நிதியை யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வாருங்கள். இந்த நேரத்தில் கொண்டு வராத நிதி மற்றும் அறிவால் பலனில்லை. எங்களுக்கும் எங்கள் கட்சிக்கும் ஒரே எதிர்பார்ப்பு இருக்கிறது. அது இந்த நாட்டை கட்டியெழுப்புவது தான் - என்றார்.

அதேவேளை, வவுனியாவில் நேற்று நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவர் என்று தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, மக்களின் காணிகள் விரைவில் விடுவிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

வடக்கு மக்களுக்குச் சொந்தமான காணிகள் பாதுகாப்புக் காரணங்களுக்காக அரசாங்கத்திடம் இருக்கின்றது. அந்தக் காணிகள் அனைத்தையும் மீண்டும் மக்களுக்கு நாங்கள் வழங்குவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-எ-26-110)

### இருமாதக்...

அந்த வாகனத்தில் பயணித்த பெண் ஒருவர் இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரிவித்தபோது, நாங்கள் பயணித்த வாகனத்தை முந்திச் சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்று தடுமாறி விபத்துக்குள்ளானது. அதற்கும் எமக்கும் தொடர்பில்லை.

சம்பவ இடத்துக்கு வந்தபொலிஸார் எனது கணவரிடம் சாரதி அனுமதிப் பத்திரத்தைக் கோரினர். போக்குவரத்துப் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வராததால் எனது கணவர் சாரதி அனுமதிப் பத்திரத்தைக் கொடுக்கவில்லை.

அதன்பின்னர் எனது கணவரைப் பொலிஸார் தாக்கினர். அதைத் தடுக்க முயன்ற என்னையும் தாக்கினர். அதில் எனது இரண்டுமாதக் குழந்தையையும் தூக்கி வீசினர். எனது சகோதரர்கள் மீதும் பொலிஸார் தாக்குதல் நடத்தினர் என்று தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து அங்கு பதற்றமான நிலைமை ஏற்பட்டிருந்தது.

இது தொடர்பாக நேற்றுக் கருத்துத் தெரிவித்த யாழ்ப்பாணம் பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.எஸ்.எம். ஜருள், இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

'விபத்தில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தரும், கைகலப்பில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தரும் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜெயசிங்கவின் உத்தரவின் அடிப்படையில் விசேட பொலிஸ் குழுவினர்விசாரணைகளைமுன்னெடுத்துள்ளனர்.

விசாரணைகளில் குற்றவியல் குற்றங்கள் கண்டறியப்பட்டால் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். பொலிஸாரின் நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். பொலிஸார் பொதுமக்களின் பாதுகாப்புக்காகவே கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு என ஒரு வரையறை இருக்கின்றது. அவற்றை அவர்கள் மீற முடியாது. மீறினால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். இந்தச் சம்பவம் தொடர்பாக பக்கச் சார்பற்ற விசாரணைகள் முன்னெடுக்கப்படும்' என்றும் அவர் தெரிவித்தார். (அ-எ-20)

### தேர்தல்...

இன்று நள்ளிரவுமுதல் ஆரம்பமாகும் மௌன காலத்தில் எவரும் தேர்தல் விதி மீறல்களில் ஈடுபடக்கூடாது எனவும் அவ்வாறு ஈடுபடுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் சமூகவலைத்தளங்கள் ஊடாகவும் பரப்புரை முன்னெடுக்கமுடியாது என்றும் அதைக் கண்காணிப்பதற்கும் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன எனவும் தேர்தல்கள் ஆணைக் குழு அறிவுறுத்தியுள்ளது.

அதேவேளை, நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்கெடுப்பு எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை இடம்பெறவுள்ளது. (அ-எ-44)

### எல்லை...

தமிழ்நாட்டின் இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை புறப்பட்ட மீனவர்களே, தனுஷ்கோடிக்கும், நெடுந்தீவுக்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு மீன்பிடியில் ஈடுபட்டிருந்தபோது இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் காங்கேசன்துறைக்குக் கொண்டு செல்லப்பட்டு கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அவர்களை ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-எ-100-66)

### நாட்டுக்கு...

இலங்கையில் இருந்து அகதிகளாகத் தமிழகத்துக்குச் சென்றிருந்த இவர்கள், படகு மூலம் மீண்டும் நாட்டுக்குத் திரும்பியநிலையிலேயே கைது செய்யப்பட்டுள்ளனர்.

மூன்று சிறுவர்கள் உட்பட 9 பேர் படகு மூலம் வந்திருந்தநிலையில் அவர்களைக் கைது செய்த நெடுந்தீவுப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-100)

### பொதுத்...

இதுவரை கிடைத்த ஆயிரத்து 999 முறைப்பாடுகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளன என்றும் 581 முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனவும் தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற தேர்தல் 2024

## ஸ்ரீ லங்கா தொழிலாளர் கட்சி
## (வன்னித் தேர்தல் மாவட்டம்)



X

1 X

எங்கள் வன்னி
எங்கள் மக்களுக்கு

## தி.இடபாரூடன்
(மல்லாவி பிள்ளையார் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

X

1 X | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.11. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Registered as a Newspaper

# உதயன்

## தேர்தல் சிறப்பிதழ்


சுடர் : 39
கதிர் : 350

திங்கட்கிழமை
11 நவம்பர் 2024

ஐப்பசி 25
வள்ளுவர் ஆண்டு 2055





மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தல் - 2024

## யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்



### உரிமைக்கான போராட்டக் களங்களில்....


சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில்


வெடுக்குநாறி மலையில் பொலிசாரினால் சிவராத்திரி தினத்தன்று கைது செய்யப்பட்டவர்களை வழக்காடி விடுவித்தபோது


யாழ் பல்கலைக்கழக முள்ளிவாய்க்கால் தூபி உடைக்கப்பட்டபோது


தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டத்தில்



ஜனாதிபதியின் வருகைக்கெதிரான ஆர்பாட்டத்தில் பொலிசாரினால் கைது செய்யப்பட்டபோது



பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணியில்

### தமிழரின் உரிமைக்காக ஐக்கிய நாடுகள் சபையில்...






### இலக்கு ஒன்றே இனத்தின் விடுதலை!





**கனகரட்ணம் சுகாஷ்** ஆகிய நான்,



தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைசார் அரசியல் பயணத்தில் கொள்கை தவறாது என்றும் மாவீரர்கள் காட்டிய பாதையில் நேர்மையுடன் பயணிப்பேன் என இத்தால் உறுதியளிக்கின்றேன். இப்பயணத்தில் நான் தடம்மாறினால் எந்நேரமும் எவ்விடத்திலும் என்னைக் கேள்வி கேட்கவும், ஏன் தூக்கி வீசவும் உங்களுக்குப் பூரண உரிமையும் அதிகாரமும் உண்டு.

தொ.இல: **077 936 1354**

அன்புரிமையுடன்,
(கையொப்பம்)

## தடம் பதித்த சுவடுகள் சில ...

- 2003: யாழ்ப்பாணக் கல்லூரியின் மாணவத் தலைவன்.
- 2005: யாழ் பல்கலைக்கழகச் சட்ட மாணவர் சங்கத்தின் முதலாவது தலைவன்.
- ஈழத் தமிழருக்கு நீதிகேட்டு ஐக்கிய நாடுகள் சபை உட்படச் சர்வதேச மன்றங்களில் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வருகின்றமை.
- காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், அரசியல் கைதிகளின் விடுதலை, இராணுவத்தின் வசமுள்ள பொது மக்களின் காணிகளை விடுவித்தல் போன்றவற்றிற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலும் ஜனநாயகப் போராட்டக் களங்களிலும் முன்னின்று செயற்படுகின்றமை.
- தையிட்டி, நிலாவரை, காரைநகர், மண்டைதீவு, மாதகல், சுழிபுரம் (பறாளாய்), கிளிநொச்சி (உருத்திரபுரீச்சரம், பொன்னாவெளி, சந்திரன் பூங்கா), குருந்தூர்மலை, வெடுக்குநாறி மலை, மாதவனை, மயிலத்தமடு, கல்முனை என்றவாறாகத் தமிழர் தேசம் எங்கும் நிலமீட்புப் போராட்டங்களில் தன்னை அர்ப்பணித்தமை.
- நூற்றுக்கும் மேற்பட்ட பொதுநல வழக்குகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்காகக் கட்டணமின்றி வழக்காடியமை.
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் தூபி உடைக்கப் பட்டபோது மாணவர்களுக்குத் துணையாக நின்று உடைக்கப்படவிருந்த மாவீரர் தூபியை உடைக்கவிடாமல் தடுத்து நிறுத்தியமை.
- நாட்டுப்பற்றாளர் நடேசன் அறக்கட்டளை வாயிலாக உதவி வேண்டும் மக்களுக்குக் கல்வி, விளையாட்டு, மருத்துவம் மற்றும் வாழ்வாதாரப் பணிகளை முன்னெடுத்து வருகின்றமை.
- நீதியைப் பெறுவதற்கு ஏழ்மை தடையாகி விடக்கூடாது என்பதற்காகத் "தமிழர் உரிமைகள் கண்காணிப்பகம்" (Tamil Rights Watch) எனும் இலவசச் சட்ட மையத்தினைச் செயற்படுத்தி வருகின்றமை.
- தமிழ்த் தேசத்தில் இளைஞர், யுவதிகளுக்குச் சுயதொழிற் பயிற்சிகளை வழங்கித் தற்சார்புப் பொருளாதாரத்தின் அடிப்படையில் அவர்களைத் தொழில் முயற்சியாளர்களாக்கும் இலக்கோடு "இலவசப் பயிற்சி மையம்" வட்டுக்கோட்டையில் கட்டமைக்கப்பட்டு வருகின்றது.

**ஈழத் தமிழரின் உரிமைக் குரலை ஆதரிப்போம்!**



கனகரட்ணம்

# சுகாஷ்

(சட்டத்தரணி)




## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

## அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

தாயகம் - தேசியம் - சுயநிர்ணய உரிமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்குக்கான ஆதரவு தமிழரை கூறையாடும்

## ஈ. சரவணபவன் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், நவ.11**

**தென்னிலங்கைக் கட்சிகளை நோக்கி இளையோர் செல்வது தமிழர்களுக்கு ஆபத்தானது. தேசியத்துக்காக உயிர்களை அர்ப்பணித்தவர்களைச் சிறுமைப்படுத்துவதாக அமையும். எனவே தமிழர்கள் சிந்தித்து தமிழ்க் கட்சிகளுக்கு வாக்களிக்கவேண்டும் - இவ்வாறு நாடாளுமன்றத் தேர்தலில் சுயேச்சைக்குழு - 14 இல் மாம்பழச் சின்னத்தில் போட்டியிடும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ. சரவணபவன் தெரிவித்துள்ளார்.**

யாழ்.ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் கடும் விரக்தியில் உள்ளனர். அந்த விரக்தி தென்னிலங்கை கட்சிக்கு வாக்காக மாறக்கூடாது. மாறினால் தேசியத்துக்காக உயிர்களை அர்ப்பணித்தவர்களை சிறுமைப்படுத்துவதாக அமைந்துவிடும். ஒரு கட்சி பிடிக்கவில்லை என்றால் மற்றைய தமிழ் கட்சிக்கு வாக்களியுங்கள். தென்னிலங்கைக் கட்சிகளை நோக்கி இளையோர் செல்வது தமிழர்களுக்கு ஆபத்தானது. திருகோணமலை பறிபோய்விட்டது. அம்பாறை பறிபோய்விட்டது. தற்போது முல்லைத்தீவு பறிபோய்க் கொண்டு இருக்கிறது. இந்த நிலை தொடரக்கூடாது.

நாங்கள் பேசாமல் இருந்தமையால் தான் தமிழரசுக்கட்சி உடைந்தது. அதற்கு நாங்களும் பொறுப்பேற்கவேண்டும். எல்லோரையும் மீண்டும் ஒன்றாக்க வேண்டும். இல்லாவிட்டால் சிதைந்து போய் விடுவோம். அதனால் தான் தீவிர தேசிய பற்றுள்ளவர்கள் ஒன்றிணைந்த கட்சியாக சனநாயக தமிழரசுக் கூட்டமைப்பு உதயமாகியுள்ளது. அதில் தேசியத்தின்பால் நாட்டமுள்ளவர்கள் அனைவரையும் உள்ளீர்ப்போம்.

எங்களுடைய அரசியல் சரியான முறையில் நகரவேண்டுமாயின் தமிழர்கள் அனைவரும் ஒற்றுமையாக இருக்கிறோம் என்பதைக் காட்டவேண்டும். ஆகவே தென்னிலங்கைக் கட்சிகளுக்கு வாக்களிக்காது , தமிழ்க் கட்சிகளுக்கே தமிழர்கள் வாக்களிக்க வேண்டும்- என்றார். (ச-20)

# முகமூடி அணிவோரை நிராகரிக்குக

## சிவில் சமூக அமையம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ. 11

தமிழ்த்தேசிய அரசியற் கொள்கையிலிருந்து ஒருபோதும் விலகாது தடுமாற்றமேதுமின்றி தொடர்ந்து உயரிய உறுதியுடன் நிற்கும் கட்சிகளுக்கு எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் உங்கள் வாக்குகளை வழங்கவேண்டும்.

-இவ்வாறு தமிழ் சிவில் சமூக அமையம் கடந்த வியாழக்கிழமை அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

தமிழ்த்தேசிய அரசியல் நீக்கம், தமிழ் வாக்குகளைச் சிதறடிப்பது போன்ற நோக்கங்களுக்கு மேலதிகமாகத் தேசிய மக்கள் சக்தி தமிழர் தாயகத்தில் ஏற்பட்டுள்ள சிறிய குழப்பங்களைச் சாதகமாகப் பயன்படுத்தித் தமிழ்மக்களின் வாக்குகளைக் கொள்ளையடிக்க முனைகிறார்கள். இத்தகைய வேட்பாளர்களும், அவர்களின் கட்சிகளும் நிராகரிக்கப்பட வேண்டியவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-66)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருதிக் கொடை

யாழ்ப்பாணம், நவ.11
இரத்தமுகாம் நிகழ்வு ஜி.எம்.ஓ.ஏ இன் ஏற்பாட்டில் தெல்லிப்பழை ஆதார மருத்துவ சாலை புற்றுநோய் பிரிவு வளாகத்தில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் பி.ப. 2 மணி வரை நடைபெற வுள்ளது. (45-10)


பாராளுமன்ற பொதுத் தேர்தல் -2024
(யாழ் - கிளிநொச்சி மாவட்டம்)



அன்றாடப் பிரச்சினைக்கான தீர்வுக்கு!..
அபிவிருத்திக்கான தீர்வுக்கு!..
அரசியலுரிமைக்கான தீர்வுக்கு!..
வாக்களிப்பீர் வீணைக்கு

1

ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன்
(ஶ்ரீங்கன்)
(கட்சியின் யாழ். மாவட்ட மேலதிக நிர்வாக செயலாளர்,
கட்சியின் ஊடகப்பேச்சாளர், பருத்தித்துறை பிரதேச சபை முன்னாள் தவிசாளர்)

4

உங்கள் முதன்மைத் தெரிவு
தோழர்
டக்ளஸ் தேவானந்தா
(ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம்)

X

X 1 2 3 4 5 6 7 8 9

பாராளுமன்றத் தேர்தல் - 2024
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி





இம்மானுவல் ஆனல்ட்
B.A (Hons) Phil. Spl
MSS Limra International (USA)
AMTC Limra International (USA)

- முன்னாள் முதல்வர், யாழ் மாநகர சபை.
- முன்னாள் உறுப்பினர், வடக்கு மாகாண சபை.
- மொழிபெயர்ப்பாளன்.

X 2

“தமிழரின் தாகம் தமிழ்த் தேசியம்”
தமிழ் தேசியத்திற்காய் என்றும் தடம்மாறாத பயணம் ....

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
பாராளுமன்ற தேர்தல் 2024

ஊஞ்சல் சின்னம்
X 4
சுயேச்சைக் குழு - 2



நேர்மையான வினைத்திறன்மிக்க அரசியலுக்கு!
இளைஞர்களின் வருகையை ஆதரிப்போம்!

E.S.P. நாகரத்தினம்
கமலரூபன்
சட்டத்தரணி, இளம் தொழில் முயற்சியாளர்
LL.B (Hons), BA (Economics) (University of Colombo)

இரண்டு ஆண்டு கால செயல்திட்டம்

- எமது தமிழர் பரப்பான சுயத்திலும் புலத்திலும் பலமான கட்டமைப்பினை உருவாக்குதல்.
- யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில், எவ்வித கட்சி வேறுபாடுகளின்றி, ஒருமித்த நிலைப்பாட்டை ஏற்படுத்தி, அரசியல் தீர்வு மற்றும் பொருளாதார மேம்பாடு தொடர்பான பொதுத்தீர்மானத்தை நிறைவேற்றுதல்.
- இளைஞர் வேலைவாய்ப்புத்திட்டம்.
- அறிவோம் ஆழ்வோம் செயல்திட்டம்.
- போக்குவரத்து மேம்பாட்டுத்திட்டம்.

2030ஆம் ஆண்டை நோக்கிய செயல்திட்டம்

- தமிழர் தரப்பில் பலமான கட்டமைப்பை உருவாக்கி நிலையான நீடித்த அரசியல் தீர்வு முன்னெடுப்புக்கள்.
- விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் மற்றும் சேவைத்துறையில் தன்னிறைவான பொருளாதார மேம்பாட்டுடன் கூடிய செயல்திட்ட முன்மொழிவுகள்.
- 2050ஆம் ஆண்டை நோக்கிய கிராமங்களின் எழுச்சியையும் நகரத்தை நவீனமயப்படுத்துவதற்கான செயல்திட்ட முன்மொழிவுகள்.

2050ஆம் ஆண்டை நோக்கிய செயல்திட்டம்

- விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் மற்றும் சேவைத்துறையில் தன்னிறைவடைதல்.
- இளைஞர்களின் இருப்பை பலப்படுத்தி ஒரு சமூக, பொருளாதார கட்டமைப்பை உருவாக்குதல்.
- வளமான அமைதியான தேசம் என்ற உயர்நிலையை எட்டுதல்.

"எமது இரண்டு வருட கால செயல்திட்ட முன்னேற்றங்களையும், 2030 மற்றும் 2050 ஆண்டுகளை நோக்கிய செயல்திட்ட முன்மொழிவுகளையும் 2026ஆம் ஆண்டு பொது மாநாட்டில் வெளியிடல்!"

"வீழ்ந்தால் நான் மட்டும் வீழ்கிறேன்!
எழுந்தால் பலமான தமிழர் பரப்பு புதுவிடியலை நோக்கி பயணிக்கட்டும்.

நாடாளுமன்றத் தேர்தல் -2024

43 வருடங்களாக பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டம் ஆகியவற்றின் மூலம் கைதுசெய்யப்பட்ட போராளிகளுக்காக 1000 க்கும் மேற்பட்ட வழக்குகளை சிங்களத்தின் கோட்டைக்குள் நின்று அச்சமின்றி வெற்றிகரமாக எதிர்கொண்டவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா



- 11 மாணவர்கள் கடற்படையால் கடத்தப்பட்டு கப்பம் கேட்டு கொலை செய்யப்பட்ட வழக்கு
- கடற்படைத் தளபதி வசந்த கருணாகொட நீதிமன்றல் ஆஜராக உத்தரவு
- திருகோணமலை இரகசிய வதை முகாம் கண்டுபிடிப்பு
- தேசியப் பாதுகாப்பு என்ற போர்வையில் கப்பம் பெற்ற விடயம் வெளிப்படுதல்.
- யுத்தம் முடிவுற்ற பின் சிறுமி சோபிகா பெற்றோரிடம் கையளிக்கபட்ட வழக்கு
- கொழும்பில் பாரிய குண்டு வெடிப்புகளைச் செய்தார் என 2007இல் கைது செய்யப்பட்ட பத்மநாதன் ராஜீவ் 2014 இல் விடுதலை
- லக்ஸ்ன் கதிர்காமர் கொலையில் தொடர்புடையவர் எனக் கைது செய்யப்பட்ட ஞானகோன் 55 நாட்களில் விடுதலை
- 1991ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் உளவாளி எனக் கூறப்பட்டு ஒப்படைக்க மறுக்கப்பட்ட மாவீரன் அகிலனின் வித்துடலை சளைக்காமல் போராடி மீட்டெடுத்து அவரது தாயாரிடம் பாதுகாப்பாக இறுதிச் சடங்குக்காக ஒப்படைத்தார்.
- மாமனிதர் ரவிராஜ் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டார். அவரது பிரேதம் தகனம் செய்வதற்கு மறுப்பளிக்கப்பட்டது. ஆனாலும் ராஜதந்திரமாக அவரது பிரேதத்தைப் பெற்று ரவிராஜின் மனைவி சசிகலாவிடம் இந்து சமய முறைப்படி தகனக்கிரியைகளுக்காக ஒப்படைத்தார்.

(துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட ஒருவரை புதைக்க முடியுமே தவிர எரிக்க முடியாது)

இந்த வழக்குகளில் கைது செய்யப்பட்டவர்களுக்காக சளைக்காமல் சட்டக் களத்தில் நின்று வாதாடி அவர்களை விடுவித்த தமிழர்களின் நம்பிக்கை கே.வி.தவராசா

K.V.தவராசா
சுயேச்சைக்குழு -14

தமிழர்களின் நீதிக்காக
43 வருடங்களாக போராடுபவருக்கே
உங்கள் வாக்கு

X 3


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை செல்வாவின் பேரன் என்பது மட்டுமே இளங்கோவனுக்கு அடையாளமல்ல





## இளங்கோவனின் நண்பர் ரூபன் கருத்து

நேர்கண்டவர்: கணேஸ்குமார் மதியந்தி
(ஊடகக்கற்கைகள் துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

யாழ்.- கிளிநொச்சி தேர்தல் தொகுதியில்-தமிழரசுக் கட்சியின் சார்பில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் இளங்கோவன் தொடர்பாக அவரின் நண்பரும், அபிமானியும், நலன்விரும்பியுமான ரூபன் வழங்கிய நேர்காணல்.

**கே: இளங்கோவனைப் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?**

**ப:** என் பார்வையில் நேர்மை, உண்மை, எளிமை என்பவற்றை ஒருங்கே கொண்ட யதார்த்தவாதி, தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர்களுள் முதன்மையான வரான தந்தை என எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட செல்வநாயகத்தினதும், தமிழின விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்த இரும்பு மனிதன் என அழைக்கப்படும் மருத்துவர் நாகநாதனினதும் பேரனே அவர். மொத்தத்தில் தமிழ்த் தேசிய உணர்வு இரத்தத்தில் கலந்த அகிம்சைவாதியென இளங்கோவனைச் சொல்லலாம்.

**கே: தமிழரசுக் கட்சி பல்வேறு குழப்பங்களுக்கு உள்ளாகியுள்ள இக்கால கட்டத்தில் இளங்கோவன் தேர்தலில் களமிறங்கியது சரியா?**

**ப:** மிகச் சரியான காலம் என நான் கருதுகின்றேன். காரணம் தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது முதல் இன்றுவரை பல்வேறு தலைமைகளால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தலைவர்களின் தலைமைத்துவத்துக்கு ஏற்ப கட்சியின் நடைமுறைகளில் காலத்திற்கு காலம் சிலமாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை அனைவரும் அறிவோம் . தற்போது காணப்படும் குழப்ப நிலையானது மக்கள் மத்தியில் கட்சி தொடர்பாகவும் தலைமைகள் தொடர்பாகவும் அதிருப்தியும் நம்பிக்கையீனமும் ஏற்பட்டுள்ளதை மறுக்கமுடியாது.

தலைமையைத் தெரிவு செய்வதில் விட்டுக் கொடுப்புகள் செய்யாமை, இழுபறிகள், கட்சிக் கட்டமைப்புகள் சரியாக பேணப்பட்டு முன்னெடுக்கப்படாமை, தேர்தல் காலத்துக்குப் பிறகு சாதாரணமக்கள் தமது குறைகளைக் கூற வாய்ப்பளிக்காமை அல்லது அலைக்களிக்கப்படுகின்றமை, முறையற்ற செயற்பாட்டில் ஈடுபடுகின்றமை போன்ற பிரச்சினைகள் தமிழரசுக்கட்சியிலும், தமிழரசுக் கட்சி சார்பாக மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யப்பட்டவர்களிடம் இருக்கின்றன.

ஒட்டுமொத்த தமிழ் மக்களின் பிரதிநிதியாக தமிழ் மக்களின் உரிமை மற்றும் இருப்பு சார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வை பெற்றுத்தருவதற்காக செயற்படும் தமிழரசுக் கட்சி இவ்வாறான காரணக்களால் படிப்படியாக வீழ்ச்சியை நோக்கிச் செல்கின்றது. இந்நிலையில் தமிழ் மக்களின் உரிமையுடன் கூடிய அபிவிருத்தியை தமது இலட்சியமாக கொண்ட ஆளுமைமிக்க, தமிழ் மக்களின் வளர்ச்சியில் உறுதியாக நின்று செயலாற்றுகின்ற சட்டவாளர் இளங்கோவன் களமிறங்குவது காலத்தின் கட்டாயமும் தேவையுமாகும். இவரின் வரவினூடாக கட்சியானது அனைவரும் இணைந்து செயற்பட்டு, சிறந்த தலைமையுடன் கூடிய ஓர் அணியாக மாறுவதுடனும் தமிழ் மக்களுக்குச் சிறந்த எதிர்காலத்தை நோக்கிச் செல்லவும் வழி சமைக்கு என நம்புகின்றேன். இருப்பினும் அதற்கான கால அவகாசம் தேவை.

**கே: தந்தைசெல்வாவின் பேரன் என்ற அடையாளத்தை தாண்டி இளங்கோவனுக்கு என்ன அடையாளம் இருக்கின்றது? அவர் சமூகத்துக்கு என்ன செய்துள்ளார்?**

**ப:** இளங்கோவன் எந்தச் சந்தர்ப்பத்திலும் தன்னை முன்னிலைப்படுத்தி செயற்படமாட்டார். மற்றவர்களை ஊக்கப்படுத்தி அவர்களுக்கு வாய்ப்பளித்து பின்னணியில் முறையான திட்டமிடலுடன் சிறப்பாகவும் ஆக்கபூர்வமாகவும் செயற்பட்டு குறித்த நோக்கை வெற்றியடையச் செய்ய, வியர்வை சிந்தி உழைக்கும் நல்ல தலைவர், நல்ல வழிகாட்டி.

அத்துடன் இவர் ஒருசிறந்த சமூகச் செயற்பாட்டாளர், செல்வநாயகம் நினைவு அறக்கட்டையின் தலைமை அறங்காவலர். இதனூடாக பாடசாலைகளின் கல்வி அபிவிருத்திக்காக திறன் வகுப்பறைகளை அமைத்தல் , ஆங்கில-தொழிநுட்பக் கல்வியை விருத்தி செய்ய கற்றல் மையம் கணினி வசதிகளை ஏற்படுத்தல்,

தற்காலிக ஆசிரியர் கொடுப்பனவு, வறுமைக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு சிறுகற்றல் உதவியை 10 வருடங்களுக்கு மேலாக வழங்கி வருதல்,

கடந்த காலத்தில் அரசியலமைப்பு தொடர்பாக மக்கள் கருத்தறிந்து சீர்திருத்தங்களை முன்வைத்த பணிக் குழுவின் தமிழரசுக் கட்சிசார்பில் குறித்த பணியை ஏனையோருடன் இணைந்து செயற்படுத்தல் என்று அவரின் செயற்பாடுகளைச் சொல்லிக் கொண்டே போகலாம்.



அத்துடன் பொத்துவில் முதல் பொலிகண்டி வரை யான தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுப்பதற்கான பேரணியை முன்நின்று நடத்தியவர்களுள் முக்கியமான ஒருவராக செயற்பட்டவர். அதற்காக அரச படைகளின் பல்வேறு நெருக்குதல்களுக்கு முகம் கொடுத்து தமிழ் மக்களுக்காக தன்னை அர்ப்பணித்தவர். 2009 இல் தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து 'மெனிக் பாம் ' முகாமுக்கு அனுப்பப்பட்ட போது சர்வதேச நிறுவனங்களின் உதவியுடன் ஏதிலிகளுக்கான கூடார வசதிகள், சமைத்த உணவுகள், நீர்வசதி, உளவியல் ஆற்றுப்படுத்தல் சேவை போன்ற பல்வேறு பணிகளைக் களத்தில் நின்று திட்டமிட்டு பணியணியினரூடாக நடைமுறைப்படுத்தியவர்.

வன்னிப்பகுதிக்கு மக்கள் மீள்குடியேற்றப்பட்ட போது சர்வதேச நிறுவணங்களின் முகாமையாளராக அங்கு களத்தில் நின்று வீடு, வாழ்வாதார வசதி, சுகாதாரவசதி, உளவளத் துணைச் செயற்பாடு, சமூகமட்ட அமைப்புகளுக்கான பயிற்சி, இளைஞர்களுக்கான பல்வேறு பயிற்சிகள் போன்றவற்றை திட்டமிட்டுச் செயற்படுத்தியவர்.

2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சர்வதேச நிறுவனங்களில் முகாமையாளராகச் செயற்பட்டு அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் அரச கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் வாழ்ந்த தமிழ் மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய மிகக் கடினமான சூழலுக்கு மத்தியில் அர்ப்பணிப்புடன் பணியாற்றியவர். இதனால் அவர் உயிர் அச்சுறுத்தலுக்குள்ளாகி சிறிது காலம் நாட்டை விட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலைக்கும் தள்ளப்பட்டவர்.

சுனாமி தாக்கத்திற்கு உள்ளான தமிழ் மக்களுக்காக அந்தக்காலப்பகுதியில் அரசச்சார்பற்ற நிறுவணங்களூடாக வீடு, வாழ்வாதாரம் போன்ற பல்வேறு பணிகளைத் திட்டமிட்டு செயற்படுத்தியவர். வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் பல்வேறு சமூகமட்ட அமைப்புகளை உருவாக்கியதுடன் அவற்றை சிறப்பாக செயற்படுத்த இளைஞர்கள், சமூக ஆர்வலர்களை வலுப்படுத்துவதுடன் அந்த அமைப்புகளுக்கு ஆலோசகராகவும் நின்று செயற்படுகின்றார்.

சமாதான எண்ணக் கருவில் மிக ஆர்வம் கொண்டவர். வடக்கு வாழ் இளைஞர்களை சமாதானத்தின்பால் உள்வாங்க அவர்களுக்குப் பல்வேறு பயிற்சிகளை வழங்கி வருவதுடன், இளைஞர்களின் பங்களிப்புடன் சமாதான அருங்காட்சியம்

(11 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்டம்

## இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

# யார் இந்த சயந்தன்?



**-கம்பவாரிதி ஜெயராஜ்**

கேசவன் சயந்தன் எனது நீண்டநாள் நண்பர். அவரை இம்முறை தமிழரசுக் கட்சி வேட்பாளராகக் களமிறக்கியிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். அவர் சென்றமுறையே வேட்பாளராக நிறுத்தப்படவேண்டியவர் என்பது பலருடைய கருத்தாக இருந்திருக்கின்றது. அத்துடன் அவர்தான் தேர்ந்தெடுக்கப்படுவார் என்கிற எதிர்பார்ப்பும் இருந்திருக்கின்றது. ஆனால் சிலபேருடைய தலையீடுகளால் அந்த வாய்ப்பை இழந்திருக்கிறார் என்பதைக் கேள்விப்பட்டு நான் கவலைப்பட்டுமிருக்கின்றேன்.

சமூகத்தோடு இணைந்து வாழு கின்ற இளையவர்கள் இன்றைக்கு குறைந்து விட்டார்கள். அதுவொரு பெரிய குறைபாடு. சமூகத்தினுடைய நன்மை தீமைகளில் அதில் தாங்களும் கலந்துகொண்டு, அதில் ஈடுபட்டு, செயற்படுகின்ற இளையோர் தொகை இன்றைக்கு மிகக் குறைவாகிவிட்டது. இன்றைக்கு அரசியல் கட்சிகளில் இருக்கின்ற தலைவர்கள், தொண்டர்கள் என அனைவரிடத்திலும் சமூகச் செயற்பாடென்பது பூச்சியமாகத்தான் இருந்துவருகின்றது. நாங்கள் ஆண்டுதோறும் முத்தமிழுக்கும் விழாக்கள் யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் எடுத்துவருகின்றோம். யாழ்ப்பாணத்திலோ, கொழும்பிலோ தமிழுக்காகத் தமிழர்கள் அனைவரும் பெரும்பான்மையாகக் கூடுகின்ற பெருவிழாக்கள் இதுவாகும். அப்படியான தமிழுக்கான பெருவிழாவில் கூட நம்முடைய கட்சித்தலைவர்கள் பல பேரைக் காணமுடிவதில்லை. இதுவொரு பெரிய குறைபாடு என்றே நினைக்கிறேன். அமிர்தலிங்கம் போன்ற கூட்டணித்தலைவர்கள் வாழ்ந்த காலத்தில் நான் பார்த்து ரசித்த ஒரு விசயம், அவர்கள் வாழுகின்ற ஊர்களிலே திருமண வீடோ அல்லது மரணச் சடங்கோ இடம்பெற்றால் அத்தலைவர்கள் கட்டயாமாக அங்கே பிரசன்னமாகியிருப்பார்கள். மரணச்சடங்குகளில் கலந்துகொள்ளும் தலைவர்கள், அந்தச் சடலம் மயானத்திற்குப் போகும்வரைக்கும் அவர்களும் இறுதி ஊர்வலத்தோடு நடந்து போவதை நான் பார்த்திருக்கின்றேன். இன்றைக்கு அந்த நிலமை இல்லை. எல்லோரும் உப்பரிகையில் இருந்துகொண்டு தலைவர்களாகப் பார்க்கிறார்கள். கேசவன் சயந்தன் அதிலிருந்து விதிவிலக்கானவர் என்பது என்னுடைய கருத்து.

எல்லோருடைய இன்ப துன்ப நிகழ்வுகளிலும் சயந்தனுடைய பங்களிப்பு இருக்கும். அல்லது அந்த நிகழ்வுகளில் அவர் கலந்துகொண்டிருக்கிறார் என்கிற செய்தியை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த ஊரோடு தொடர்பிருக்கின்றபடியால் நானறிந்த செய்தி இது. கம்பன்கழகம் என்கிற வகையில், கம்பன் கழகம் நடத்துகின்ற எல்லா விழாக்களிலும் சயந்தனுடைய பங்களிப்பு இருந்திருக்கின்றது. நான் அந்தப் பங்களிப்புக்காக இதைப் பேசுகின்றேன் என்று நினைக்காதீர்கள். சந்தர்ப்பம் கிடைத்துள்ளமையால், நன்றியுடைமையோடு அதனைச் சொல்லத் தலைப்படுகின்றேன். நாங்கள் விழாக்கள் நடத்தப் பொருளாதார ரீதியில் கஸ்ரப்படும்போதெல்லாம் அவர் கைகொடுத்திருக்கிறார். அது மட்டுமல்ல, எங்களுடைய எல்லா விழாக்களிலும் அவருடைய பிரசன்னத்தை நான் பார்த்திருக்கிறேன். தனக்கொரு முக்கியத்துவத்தைத் தேடாது, விழா அரங்கின் ஓர் ஓரத்தில் அமர்ந்திருந்து, விழாவின் பேசுபோருளைக் கேட்டுப்போகும் தன்மையினைப் பார்த்திருக்கிறேன்.

இன்றைக்கு, பெரும்பான்மையான கட்சிகளிலும் இப்படியான இளையோர்கள் இல்லாமல்தான் இருக்கிறார்கள். தேர்தல் என்றால்தான் அவர்களை முகம்காணக் கூடியதாக இருக்கின்றது. கேசவன் சயந்தனைப் பொருத்தவரையில், அந்தத் தகுதியைப் பார்த்து நான் மகிழ்ந்திருக்கிறேன். மக்களோடு மக்களாக வாழுகின்ற, ஓர் இனத்தின் பிரதிநிதியாக செயற்படுகின்ற அந்தத் தன்மை எனக்கு மிகவும் பிடிக்கும்.

அரசியலில், இம்முறை அவருக்கு இந்த வாய்ப்புக் கொடுக்கப்பட்டமைக்குரிய நியாயம் என்னவென்றால், நான் ஓர் அறைக்குள்ளே இருந்துகொண்டு உலகத்தைப் பார்க்கின்றவன். அதனாலே சொல்கிறேன். இன்றைக்கு பரந்துவிரிந்துவிட்ட ஊடகத் தளங்களில், கேசவன் சயந்தனுடைய நேர்காணல்களைப் பார்க்கிறேன். தலைவர் எனச் சொல்கின்றவர்களுக்கு அந்தப் நேர்காணல்களுக்கு முகங்கொடுக்கத் தெரியவில்லை. நம்முடைய திருவள்ளுவர் திருக்குறளிலே, பொருட்பால் என்று அரசியல் பற்றி பேசுகின்ற இடத்திலே, மந்திரிக்கு முதல் அதிகாரமாக சொல்வண்மையை வைக்கிறார். வார்த்தை வண்மையைப் பயன்படுத்தத் தெரிந்தவனால்தான் அரசியலில் நிமிர்ந்து நிற்க முடியும் என்று திருவள்ளுவர் சொல்லுகின்றார். அந்தவகையில் நான் இந்த நேர்காணல்களைப் பார்க்கும்போதெல்லாம் கவலைப்படுவேன். தலைவர்கள் பலர், நேர்காணல் என்று வந்துவிட்டு, கேள்விகளுக்கு முகங்கொடுக்க முடியாமல், சிந்திக்கின்ற எண்ணத்திற்கு பதில் கொடுக்க முடியாது வார்த்தைகளிலே குழம்புவார்கள். இப்படியான நிலையில், அடுத்தடுத்து கேசவன் சயந்தனுடைய இரண்டு, மூன்று நேர்காணல்களைப் பார்க்க முடிந்தது. அதனைப் பார்த்து நான் உண்மையிலேயே மகிழ்ந்தேன். இது தேர்தல் காலத்திலே நடந்த விடயமல்ல. இன்றைக்குப் சில காலத்திற்கு முன்னர் நான் பார்த்த அவரின் நேர்காணல் பற்றி குறிப்பிடுகின்றேன். சயந்தனுக்கே அதனைச் சொல்லிப் பாராட்டினேன். கேள்வியொன்றைக் கேட்டால் சரியான முறையிலே முகங்கொடுக்க அவருக்குத் தெரிகின்றது. தான் எடுத்துக்கொண்ட விடயத்தில் தெளிவாகவும், சுருக்கமாகவும் விபரிக்கின்ற அவரின் ஆற்றலைக் கண்டு நான் வியந்திருக்கின்றேன். இன்றைக்கு இத்தகைய இளந்தலைவர்கள் நமக்குத் தேவை. பாராளுமன்றத்திலும் சரி, வெளியிலும் சரி பேசுகின்ற தலைவர்களின் பேச்சுத்தான் ஓர் இனத்தினுடைய கருத்தாக ஏற்றுக்கொள்ளப்படும். ஆகவே ஓர் இனத்தினுடைய பிரதிநிதிகளாக இருக்கின்றவர்கள் பேசுகின்ற தகுதி பெற்றிருக்க வேண்டும். தான் நினைத்த கருத்தை சொல்லத் தெரிந்திருக்கவேண்டும். வெறுமனே வார்த்தைகளை சொல்லாமல், அது அவர்களுடைய உணர்வுசார்ந்த விசயமாகவும் இருக்க வேண்டும். சயந்தனைப் பொருத்தவரையில், மக்களோடு மக்களாக வாழ்ந்ததோ என்னவோ தெரியவில்லை, நம் இனப்பற்றிய உணர்வு அவரிடம் நிறைய இருக்கின்றது. அந்த உணர்வைத் தெளிவாக வெளிப்படுத்துகின்ற ஆற்றல் அவரிடம் இருக்கின்றது. மக்களுடைய இன்பதுன்பங்களில் கலந்துகொள்கின்ற அந்த மனப்பாங்கு இருக்கின்றது. இவையெல்லாம் இருக்கிறவர்கள் இன்றைக்கு மிகக்குறைவானவர்களாகத்தான் இருக்கிறார்கள். விரல்விட்டு எண்ணக் கூடியவர்களாகத்தான் இருக்கிறார்கள். அதனால் தான் சொல்கிறேன், இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக அவருக்கு தமிழரசுக் கட்சி கொடுத்திருக்கும் வாய்ப்பு மிகப்பொருத்தமானது என்றே கருதுகின்றேன். அவர் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவரின் ஆற்றல் மேலும் ஒளிர்விடும் என நான் நம்பிக்கை கொள்கின்றேன். ஆகவே நம் இனம்சார்பாக சொல்கிறேன், அனைத்து மக்களும் அவருக்கு ஆதரவளித்து அவரை வெற்றிபெறச்செய்யவேண்டும் எனத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.





கேசவன் சயந்தன் கடந்த சில வருடங்களாக எனக்கு நன்கு அறிமுகமானவர். மிகவும் ஆர்வத்தோடு, பற்றுறுதியோடு செயலாற்றக் கூடியவர். தமிழரினுடைய நிலவுரிமைகள், வழிபாட்டு உரிமைகள், இந்துக் கோயில்களினுடைய உரிமைகள் முதலியவற்றுக்கு எதிராகத் திணைக்களங்களைச் சார்ந்த அதிகாரிகள் நாசிசப் பாங்கி லான நடவடிக்கைகளை மேற்கொண்டபொழுது, பல நூற்றுக் கணக்கான வழக்குகளிலே ஜனாதிபதி சட்டத்தரணி திரு.சுமந்திரனோடு கூடியிணைந்து நீதிமன்றங்களில் வாதாடி வெற்றிபெற்று, அந்த உரிமைகளை மக்களுக்கு வென்று கொடுப்பதில் இவருடைய பங்கு கணிசமானதாகும். அது எல்லோரதும் பாராட்டுதலுக்குரியது. இதனை நீங்கள் மனதிற்கொண்டு, எதிர்காலத்திலும் இவ்வாறான பணிகளில் அவர் ஈடுபடுவதற்கு அவரைப் பயன்படுத்த வேண்டுமானால், அவருக்கு அமோகமான ஆதரவினை வழங்க வேண்டும். தமிழ் தேசிய அரசியலுக்கு தேவையான விடயங்களில் ஒன்று நேர்மை. இரண்டாவது தமிழ் சமுதாயத்தின் மீது கொண்டுள்ள பற்று. மூன்றாவது சேவை புரிகின்ற ஆர்வம். இந்த மூன்று பண்புளும் கேசவன் சயந்தனிடம் தாராளமாக இருக்கின்றன.

**- பேராசிரியர். சி.பத்மநாதன்**



நான் முன்னாள் போராளியாக இருந்தேன். எங்களைப் பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைத்திருந்தனர். அதில் ஆயிரக்கணக்காணவர்களை விடுதலை செய்து கொழும்பு நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்றனர். கொழும்பு நீதி மன்றத்தில், எல்லோருக்கும் புனர்வாழ்வளிக்கவேண்டும் எனத் தெரிவித்து, எங்களுக்கு கைவிலங்கிட்டு, புனர்வாழ்வு நிலையங்களுக்கு கொண்டு செல்ல தயாரானபோது, அந்நேரத்தில் கேசவன் சயந்தன் அவர்கள்தான் தனியொருவராக வருகைதந்து, எங்களுக்காக வாதாடினார். அவ்விடத்திலிருந்து 600இற்கும் மேற்பட்ட முன்னாள் போராளிகள் உடனடியாக விடுவிக்கப்படுவதற்காக கேசவன் சயந்தன் அவர்களே வாதாடினார். அவரின் சட்ட உதவியினால் அன்றையதினமே விடுதலைப் புலிகள் அமைப்பில் கலைசார்ந்த பணிகளில் ஈடுபட்டிருந்த 600இற்கும் மேற்பட்ட முன்னாள் போராளிகள் விடுவிக்கப்பட்டோம். இதற்காக நாம் என்றைக்கும் நன்றிக் கடன்பட்டவர்களாகவுள்ளோம். அன்றைய நாளில் போகுமிடம் தெரியாது தத்தளித்துக்கொண்டிருந்தோம். அந்நேரத்தில் எங்களுடன் வந்து கதைத்து, கை கொடுத்து உதவியர் கேசவன் சயந்தன் சட்டத்தரணி அவர்கள்தான். அதனை நாம் எப்போதும் மறக்கமாட்டோம். அன்றிலிருந்து இன்றுவரை என்ன உதவி வேண்டுமெனிலும், அவரைத்தான் நாடுகின்றோம். அவரும் முகஞ்சுழியாது எங்களுக்கான உதவிகளைப் புரிந்து வருகின்றார். ஆகவே இம்முறை இடம் பெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் இலங்கை தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் இலக்கம் மூன்றில் போட்டியிடும் கேசவன் சயந்தன் அவர் களுக்கே எமது ஆதரவினை வழங்குவோம்.

**-மாணிக்கம் சிறீஸ்கந்தராஜா, மந்துவில்**

திருக்கேதீச்சர ஆலய அலங்கார வளைவை உடைத்தமைக்கு எதிராக மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் வழக்கிலும், மன்னார் மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்று நிறைவுற்ற வழக்கிலும், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும், சட்டத்தரணி கேசவன் சயந்தன் அவர்களும் முன்னிலையாகி வழக்காடி வருகின்றனர். இது சமய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் ஒரு விசயமாகும். அதற்காக பாடுபட்டுவரும் இவர்கள் இருவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



**- திருமதி. அபிராமி கைலாசபிள்ளை**
**பிரதித் தலைவர், திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கலாசாரம் புதிதாக மாறவேண்டும்

வேட்பாளர் ஈ.எஸ்.பி. கமலரூபன் தெரிவிப்பு




யாழ்ப்பாணம், நவ. 11

சலுகை அரசியலாகவும் , இனவாத அரசியலாகவுமுள்ள அரசியல் கலாசாரம் மாற்றப்பட்டு , புதிய அரசியல் கலாசாரத்தை மக்கள் உருவாக்க வேண்டும்- இவ்வாறு யாழ் . தேர்தல் மாவட்டத்தில் சுயேச்சைக் குழு - 2 இல் ஊஞ்சல் சின்னத்தில் போட்டியிடும் சட்டத்தரணி ஈ.எஸ்.பி கமலரூபன் தெரிவித்துள்ளார்.

இவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசியல் நிலைப்பாடு, இனவாத அரசியலாகவும் , சலுகை அரசியலாகவும் காணப்படுகிறது. அதேவேளை சில தேசியக் கட்சியின் சலுகை அரசியல் வியாபாரமாகவே காணப்படுகிறது.

இந்த அரசியல் கலாசாரம் மாறவேண்டும். அரசியலை மக்கள் மயப்படுத்தவேண்டும். அரசியல் தலைவர்கள் மக்களை அரசியல் மயப்படுத்தவில்லை. தமிழ் மக்கள் இனவாத, சலுகை அரசியலில் இருந்து இம்முறை வெளியே வந்து மாற்றத்தை ஏற்படுத்துவர்.

தமிழ் மக்கள் மத்தியில் பிரதான பிரச்சினையாக இனப்பிரச்சினை மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் காணப்படுகின்றன. தேசிய மக்கள் சக்தியினர் கூறுவது போன்று, தமிழ் மக்களுக்கு தனியே பொருளாதார பிரச்சினை மாத்திரம் இல்லை. 75 ஆண்டுகளுக்கு மேலாக தீர்க்கப்படாத அரசியல் பிரச்சினையும் உண்டு. தெற்கில் இடதுசாரி கொள்கையுடையவர் ஜனாதிபதியாக வந்துள்ளார். அவர் இனவாத சிந்தனை இல்லாதவராக இருந்தால் அவருடன் சேர்ந்து இயங்கத் தயார்- என்றார். (ச-26,20)

# தடம் மாறாத கட்சி தமிழரசுக் கட்சியே!

வேட்பாளர் சுமந்திரன் தெரிவிப்பு

**மன்னார், நவ.11**

**கொள்கை மாறாத அடையாளம் மாறாத அரசியல் மாற்றத்தை உருவாக்க வேண்டுமாயின் இதே நிலைப்பாட்டில் பயணிக்கிற தமிழரசுக் கட்சிக்கு முழுமையான ஆதரவை தமிழ் மக்கள் வழங்கவேண்டும். எப்போதுமே கொள்கை மாறாத அடையாளம் மாறாத கட்சியாக எமது கட்சி திகழ்கிறது.**

- இவ்வாறு தமிழரசுக் கட்சியின் வேட் பாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் கலைத்தூது மண்டபத்தில் இடம்பெற்ற மக்கள் மன்றம் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களின் பிரதான கட்சியாக இருப்பது தமிழரசுக் கட்சி தான். அந்தக் கட்சி தான் சமஷ்டிக் கட்சி. எங்களது இந்தக் கட்சியின் சமஷ்டிக் கொள்கையை ஏளனம் செய்தவர்கள் எல்லாம் மனம் மாறி இப்போது எமது நிலைப்பாட்டுக்கு வந்துள்ளனர். கொள்கை மாறாத அடையாளம் மாறாத அரசியல் மாற்றத்தை உருவாக்க வேண்டும். அப்படியாயின் இதே நிலைப்பாட்டில் பயணிக்கிற தமிழரசுக் கட்சிக்கு முழுமையான ஆதரவை தமிழ் மக்கள் வழங்க வேண்டும் 'ஏக்கிய ராச்சிய' என்று கத்திக் கொண்டு மக்களை தவறாக வழிநடத்த வேண்டாம். அதில் என்ன உள்ளது. அதன் வரைவிலக்கணம் என்ன என்று தெரியாமல் பொய்களை மீண்டும் மீண்டும் சொல்லிக் கொள்கிறார்கள். 'ஏக்கிய ராச்சிய' என்பதன் வரைவிலக்கணத்தை முதலில் பார்க்க வேண்டும். அது ஒற்றையாட்சி அல்ல. தேசியம் என்ற ஒரு வார்த்தையை மந்திரம் போல சொல்லிக் கொண்டிருப்பவர்கள் அதற்கும் உண்மையை அறிந்து பேசவேண்டும். வெறுமனே பொய்களை கூறி கொண்டிருப்பதில் அர்த்தமில்லை- என்றார். (ச-20)

# வாக்குரிமையை பயன்படுத்துங்கள்

**மஹிந்த தேசப்பிரிய வலியுறுத்து**



கொழும்பு, நவ.11

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பதில் இருந்து விலகியிருப்ப தையோ அல்லது செல்லாத வாக்களிப்பதையோ தவிர்த்து, உரிய முறையில் வாக்களிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய, வாக்காளர்களை வலியுறுத்தியுள்ளார். வாக்கு எமது உரிமை, எமது சக்தி, எமது குரல், அது எமது நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்கின்றது. இந்த உரிமையை நாம் பயன்படுத்தவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# முத்தமிழ் விழா இன்று

யாழ்ப்பாணம், நவ.11

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி முத்தமிழ் விழா யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி பீடாதிபதி திருநாநந்தம் ஜெயகாண்டீபன் தலைமையில் சரஸ்வதி கலையரங்கில் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக உயர்பட்டப் படிப்புகள் பீடப் பீடாதிபதியும், யாழ். தமிழ்ச் சங்கத் தலைவருமான பேராசி ரியர். திருநாவுக்கரசு வேல்நம்பி, சிறப்பு விருந்தினர்களாக யாழ். தேசியக் கல்வியற் கல்லூரி ஓய்வுநிலைப் பீடாதிபதி கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தன், கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லீசன், யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் பொன்னையா வசந்தன், இலங்கை வங்கி முகாமையாளர் இராமநாதன் ரட்ணராஜ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-10)



அகில இலங்கை பரதநாட்டிய,கர்நாடக சங்கீத தேசிய மட்டப்போட்டியில்,சாவகச்சேரி இந்துக் கல்லூரி நடனக்குழுவினர் மூன்றாம் இடத்தை பெற்றனர். (ச-20)

# சூழல்நேயம்மிக்கோரை மக்கள் தெரிவுசெய்க

பொ. ஐங்கரநேசன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம் நவ. 11

காலநிலையில் படுபாதகமான மாற்றங்கள் ஏற்பட்டுவருவது உலகை அச்சுறுத்தும் தலையாய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இதனை மாற்றியமைக்க இலங்கை நாடாளுமன்றத்தில் பசுமைக்கட்சிகளின் பிரதிநிதித்துவம் அவசியம் வேண்டும் -இவ்வாறு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும், சனநாயகத் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து சனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பாக .சுயேச்சைக்குழு 14இல் மாம்பழச் சின்னத்தில் போட்டியிடும் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

மல்லாகத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில், சுற்றுச்சூழலைப் பலிகொடுத்து நிலையான அபிவிருத்தியை முன்னெடுக்க முடியாது. சூழலை அழித்து ஒருபோதும் பொருளாதாரச் [illegible] மையில் இருந்தும் விடுபடமுடியாது. சூழல் அழிவும் வளங்களின் சூறையாடலும் அரசியல் நிலையின்மையையும் பொருளாதார நிலையின்மையையும் ஏற்படுத்தும். இறுதியில் நாட்டில் அமைதியின்மையையும் அரசுக்கெதிரான குழப்பங்களையுமே ஏற்படுத்தும். உலகநாடுகள் பலவற்றின் வரலாறு இதுவாகவே உள்ளது. பேரினவாதம் கோலோச்சும் இலங்கையில் மட்டும் சூழலியல்வாதம் இன்னமும் கண்டுகொள்ளப்படாமலேயே உள்ளது. இதனை மாற்றியமைக்க பசுமைக்கட்சிகளின் பிரதி நிதித்துவம் அவசியம் வேண்டும் - என்றார். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை...

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றையும் கிளிநொச்சியில் உருவாக்கி அதனூடாக மூவின மக்களையும் ஒன்றிணைத்து புரிந்துணர்வுடன் சமாதானமான வாழும் இலங்கையர்கள் என்ற தனது தூர நோக்கத்தை நிறைவேற்ற உழைத்து வருகின்றார். இந்தியாவில் வாழும் இலங்கை அகதிகளுக்கு , தனது தந்தையால் உருவாக்கப்பட்ட 'ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம் ' எனும் அமைப்பினூடாக கல்வி, மருத்துவம், போஷாக்கு போன்ற பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொண்டவர். இப்படி இவரின் அடையாளங்களை அடுக்கிக் கொண்டே செல்லலாம். தற்காலத்தில் சிறிய விடயங்களைச் செய்துவிட்டு தங்களைப் பிரபல்யப் படுத்தும் பலரும் உள்ள, இந்தக்காலத்தில் அளப்பரிய பணிகளைச் செய்த பின்னரும் தன்னை வெளிக்காட்டா மல் விளம்பரத்தை விரும்பாத உண்மையான மக்கள் சேவகன் இவர்.

**கே: தந்தை செல்வா, இரும்பு மனிதர் நாக நாதன் ஆகியோரின் பேரன் என்ற காரணத்துக்காகவே இளங்கோவ னுக்கு இம்முறை தமிழரசுக் கட்சியில் போட் டியிடச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டதாகக் கூறப் படுவது பற்றி..?**

ப: தந்தை செல்வாவின் பேரன் என்ற அடையா ளத்தை மாற்றவே மறுக்கவோ முடியாது தான். ஆனால் அவ்வடையாளத்திற்காகத் தான் அவரைத் தெரிவு செய்தார்கள் எனக் கூறமுடியாது. நான் மேலே கூறிய, அவரால் செய்யப்பட்டசேவைகளை தெரிவுக்குழுவில் உள்ளவர்கள் அறிந்திருப்பார்கள். அத்துடன் அவர் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் கடந்த 8 வருடங்களாக ஆயுள் காலத் தொண்டராக செயற்படு கின்றார். மேலும் காங்கேசன்துறை தொகுதிக் கிளையின் உபதலைவராக கடந்த ஒரு வருடகாலமாக தலைவர் மாவைசேனாதிராஜா மற்றும் கிளை உறுப்பினருடன் இணைந்து செயற்பட்டுகின்றரர் .மேலும் அவர் தான் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான விண் ணப்பத்தை கட்சியில் சமர்ப்பித்திருந்தார். அதன் அடிப் படையில் கட்சி அவரைத் தெரிவுசெய்தது.

**கே: எதிர்காலத்தில் அவரின் பணி எவ் வாறு அமையும் என எதிர்பார்க்கிறீர் கள்?**

ப: தமிழ் மக்களின் உரிமையை பெற்றெடுப்பதற் காக அனைத்துத் தரப்பினரையும் ஒன்றி ணைக்கும் செயற் பாட்டில் மும்முரமாகச் செயற்படுவார். சமூக நீதிக்கான தனது செயற்பாட்டையும் தொடர்வார். மக்கள் நலனுக்கான மனிதாபிமானத் திட் டங்கள், அபிவிருத்தித் திட்டங்களை எமது பிரதேசத்திற்கு வழிப்படுத்துவார்.

ஒரு பிரச்சினையை உரத்துக் கூறுவதால் மட்டும் அந்தப் பிரச்சினை தீரப் போவதில்லை . மாறாக அதற்கான தீர்வை முன்வைக்கவேண்டும் . அந்தவகையில் மக்கள் சார் பிரச்சினைகளுக்கு குறுகியகால மற்றும் நீண்டகாலத் தீர்வை இளங்கோவன் கண்டறிவார்.

இன்று அரசியலில் பிரகாசிக்கும் பலர் , தாம் அரசியலில் ஈடுபட்ட பின்னரே மக்களுக்கான நலத்திட்டங்களை செய் கின்றனர். ஆனால் இளங்கோவனோ கடந்த 20 வருட காலங்களுக்கு மேலாக மக்களுக்கான நலத் திட்டங் களை செய்த பின்னரேதான் அரசியலில் பிரவேசித்துள் ளார். இவரின் பிரவேசம் தமிழ் பேசும் மக்களின் அரசி யலில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்ற ஆழமான நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.




# இலவுகாத்த கிளிகளாக தமிழர்கள் மாறக்கூடாது

## சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 11

எமக்கான நிரந்தரத் தீர்வு கிடைக் கும்வரை எமக்கு எதுவுமே தேவை யில்லை என்று கூறுவது புத்திசா லித்தனமா? அல்லது கிடைத்த வற்றை வைத்து எமது மக்களுக் கான இயலுமான சேவைகளைச் செய்துகொண்டு நிரந்தரத் தீர்வை நோக்கிப் பயணிப்பது சரியா னதா? எனவே தமிழ் மக்களுக் கான நிரந்தரமான அரசியல் தீர்வு எட்டப்படும் வரையில் குறித்தொதுக்கப்பட்ட மாகாண சபை முறைமையை நாம் நடை முறைப்படுத்தவேண்டும்.

-இவ்வாறு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் சங்குச் சின்னத்தில் களமிறங்கியுள்ள சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,



எமக்கு இழைக்கப்பட்ட அநீதிக ளுக்கு எதிராக நாம் தொடர்ந்தும் கிடைக்கக்கூடிய வழிமுறைகள் அனைத்தையும் பயன் படுத்திப் போராடவேண்டும்.

இலங்கையில் இருக்கின்ற ஒற் றையாட்சி அரசியல் சாச னத்துக்கு உட்பட்டுத்தான் இந்த நாட்டில் ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், மாகா ணசபை தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல்கள் என்பனவற்றை நடத்த முடியும். இதனை ஏற்றுக் கொண்டுதான் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் இலங்கையின் தேர்தல்களில் போட்டியிட்டும் வரு கின்றது.

ஆனால் மாகாணசபை என்று வருகின்றபொழுது அதனை ஏற் றுக்கொள்ள முடியாது என்றும் ஒற்றையாட்சியின்கீழ் நடைபெ றும் அதிகாரப் பரவலாக்கலையும் ஏற்றுக்கொள்ளமுடியாது என்றும் அதற்கான வியாக்கியானங் களையும் கூறி வருகின்றார்கள். தமிழ் மக்களின் குறுகியகால, நீண்ட கால விடயங்களைக் கருத்திலெடுத்து அவற்றை ஒரு தீர்வை நோக்கிக் கொண்டு செல் லக்கூடிய ஐக்கியப்பட்ட சக்தியாக நாம் விளங்குகின்றோம்- என் றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது ஆட்சியில் அராஜகங்களுக்கு இடமில்லை



**தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர்**
**சந்திரசேகரனுடனான நேர்காணல்**

நேர்கண்டவர்: ஜெ.சுலக்சன்

**கே: தேசிய மக்கள் சக்திக்கு ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நாடாளவிய ரீதியிலும், தமிழர் பகுதிகளிலும் ஆதரவு அலை குறைந்து வருவதாகச் சொல்லப்படுகின்றதே?**

ப: தேசிய மக்கள் சக்தியின் ஆதரவு அலையில் எந்தவிதமான மாற்றங்களும் இல்லை. அது நாளுக்கு நாள் அதிகரித்தே வருகின்றது. மறுபுறத்தில் இன்றைக்கு தென்னிலங்கையில் இருக்கின்ற பிரதான கட்சிகள் எவற்றாலும் செய்ய முடியாத பல்வேறு பணிகளை நாங்கள் நிகழ்த்தி வருகிறோம். பெரும்பாலான கட்சிகள் அனைத்துமே வெறும் பொக்கட் மீட்டிங் தான் வைக்கின்றனர். ஆனால் பிரமாண்டமான மக்கள் சந்திப்புகளை முன்னெடுப்பது தேசிய மக்கள் சக்தி மாத்திரமே. அதனால் இன்றைக்கு எதிரிகள் குழம்பி போயிருக்கின்றார்கள், பயந்து போயிருக்கின்றார்கள். அந்தப் பயத்தின் காரணமாக அவர்களுடைய வெளிப்பாடுகள் உளறல்களாக இருக்கின்றன. அந்த வெளிப்பாடுகளில் ஒன்றுதான், தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவு அலை வீழ்ந்திருப்பதாக உளறுவது. ஆனால் மக்கள் மத்தியில் நிச்சயமாக, கடந்த ஜனாதிபதித் தேர்தலை விட பன்மடங்கு ஆதரவு எமக்கு அதிகரித்து இருக்கின்றது. அதிலும் யாழ்ப்பாணத்தை எடுத்துக் கொண்டால் நாங்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 28 ஆயிரம் வாக்குகள் எடுத்து நான்காவது ஸ்தானத்திலும் இருந்தோம். இம்முறை தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாணத்திலும் முதலாவது ஸ்தானத்துக்கு வருகின்ற கட்சியாக மாறும் என்பது உறுதி. அதனால் தேசிய மக்கள் சக்தி பலமாகவே இருக்கின்றது ,எந்த விதமான வீழ்ச்சியும் கிடையாது.

**கே: அண்மையில் வசாவிளான்-அச்சுவேலி வீதியின் ஒரு பகுதியை விடுவித்தீர்கள். இது ஒரு தேர்தல் நாடகம் என்று சொல்லப்படுவது பற்றி..?**

ப: நாங்கள் அந்த வீதியை விடுவித்ததை சில அரசியல்வாதிகளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அதனால் தான் அவர்கள் இதனைத் தேர்தல் நாடகம் என்று சொல்கின்றனர். அந்த வீதி விடுவிப்பு ஓரிரு நாள்களில் எடுக்கப்பட்ட முடிவல்லை. ஜனாதிபதியாக அநுர ஆட்சிப் பொறுப்புக்கு வந்த ஒரு மாதத்தில் , இதற்கான தீர்மானங்கள் எடுக்கப்பட்டு, பாதுகாப்புப் படைகளுக்கு உத்தரவிடப்பட்டு, அந்த வீதியை விடுவிக்கலாமென்ற அறிக்கையைப் பெற்ற பின்னரே விடுவித்தோம்.

அரசியல் நோக்கத்தை அடைய வேண்டும் என நாங்கள் நினைத்திருந்தால் ஒரு பெரிய விழா வைத்து, நாங்கள் தான் திறந்தோம் என்று மார்தட்டியிருக்கலாம். ஆனால் அப்படி நாங்கள் செய்யவில்லையே. அதை படையினர் வசமுள்ள காணிகளை விடுவிக்கவும், வடக்கில் இராணுவப் பிரசன்னத்தைக் குறைக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

மேலும் இனிவரும் காலங்களில் இராணுவத்தினரால் இங்குள்ள மக்களுக்கு எந்த விதப் பாதிப்புக்களும் ஏற்படாது. இந்த நிலைப்பாட்டில் இருந்து கொண்டுதான் நாங்கள் எங்கள் நகர்வுகளை முன்னெடுக்கின்றோம். ஏனைய கட்சிகளின் அரசியல்வாதிகள் தங்களுக்கு அரசியல் செய்ய வேறுவிடயங்கள் இல்லாததால் தான் இராணுவ இருப்பு, காணி விடுவிப்பு போன்ற பிரச்சினைகளை பேசிக்கொண்டு இருக்கின்றனரே தவிர எம்மைப் போல செயலில் காட்டுவதில்லை. இனிவரும் காலங்களில் ஜனநாயகத் தன்மையை நாட்டில் உறுதிப்படுத்துகின்ற, ஜனநாயக ரீதியான நிர்வாகங்களை உறுதிப்படுத்துகின்ற ஒரு நிலைமையை முன்னெடுப்பதில் நாம் தீவிரமாக இருக்கின்றோம். இந்த நடவடிக்கைகளின் மூலம் ஜனநாயகத்துக்கான வழிகள் மேலோங்கும் என்பது தான் எமது நிலைப்பாடு.

**கே: உங்கள் ஆட்சியில் எவ்வித அராஜகங்களும் இருக்காது என்று உறுதிமொழி வழங்கினீர்கள். ஆனால் நேற்று முன்தினம் கூட சுன்னாகத்தில் பொலிஸாரின் காட்டுமிராண்டித்தனம் அரங்கேறியுள்ளதே?**

> **நாட்டில் மட்டுமல்ல யாழ்ப்பாணத்திலும் நாமே முதல்நிலை!**

ப: நாட்டில் இப்போது பொலிஸாரின் அராஜகம் தலைதூக்கி ஆடுகின்றது. நேற்று முன் தினம் கூட சுன்னாகத்தில் ஒரு சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது. அந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதிராக இருந்தவர்கள் பொலிஸார் என்பது தெரியவந்தது. அதனைத்தொடர்ந்து அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர்கள் உடனடியாகவே பதவி நீக்கப்பட்டு, விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மக்கள் மீது அராஜகம் செய்வதற்கோ, மக்களை அடக்குமுறைகளுக்கு உட்படுத்துவதற்கோ, மக்கள் உரிமைகளை மறுதலிப்பதற்கோ பொலிஸாருக்கு எந்தவித அதிகாரமும் இல்லை . ஏனென்றால் இது மக்களுடைய அரசாங்கம். இந்த அரசாங்கத்தின் மீது மக்களுக்கு இருக்கின்ற நம்பிக்கையை ஒழிப்பதற்கு ஒரு சில குடிகார, அராஜகப் பொலிஸார் முனைகின்றனர். அவர்களைக் கண்டுபிடித்து தக்க நடவடிக்கைகளை எடுப்போம்.



**கே: தேசிய மக்கள் சக்தி , காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, அரசியல் கைதிகள் விடயம் என்பன தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் என ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் உங்கள் கட்சி சொன்னது. ஆனால் பின்னர் அவை பற்றி எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையே?**

ப: தற்போதுள்ள பெரும் பிரச்சினைகளான காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, அரசியல் கைதிகளின் பிரச்சினைகள் தொடர்பிலும் நாம் கவனத்தையும், கரிசனைகளையும் எடுத்துள்ளோம். வெகுவிரைவில் அரசியல் கைதிகளுக்கும், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கும் நீதியை வழங்குகின்ற நடவடிக்கைகளை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுக்கும். நாங்கள் ஆட்சிக்கு வந்து வெறும் 44 நாட்களே ஆகின்றன. எங்களுக்கென மேலதிக அதிகாரங்கள், நாடாளுமன்றம், உள்ளூராட்சி சபைகள் என எதுவுமே கிடையாது. வெறும் ஜனாதிபதி பதவியை மாத்திரம் வைத்துக்கொண்டு தான் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றோம். இங்கிருக்கின்ற கட்சிகள் அனைத்துமே இனவாதத்தைத் தூண்டுகின்ற கீழ்த்தரமான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன. ஆனாலும் நாங்கள் நிச்சயமாக இங்கிருக்கின்ற மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் சாதகமான தீர்வுகளை முன்வைப்போம்.

**கே: இங்குள்ள தமிழ்க்கட்சிகளின் அரசியல்வாதிகள் சிலர், உங்களுடைய தேசிய மக்கள் சக்தி அரசில் அமைச்சுப் பதவியைப் பெறவுள்ளோம் என்று சொல்லி வருகின்றனர். அது உண்மையா?**

ப: தேசிய மக்கள் சக்தி , இது ஒரு தனிப்பெரும் பான்மையுடன் நாடாளுமன்றில் நிச்சயமாக ஆட்சியமைக்கும்.எமது புதிய அரசாங்கத்துக்கு மக்களுடைய ஆதரவும், மக்களை நேசிக்கும் உண்மையான அரசியல்வாதிகளுடைய ஆசிர்வாதமும் இருக்கும். மக்களுக்குத் துரோகம் செய்த, மக்களைக் கடத்திய, நாட்டை நாசமாக்கிய, மக்களுக்குப் பொய் கூறிய, மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்த, வடபகுதி மக்களால் வெறுத்தொதுக்கப்படுகின்ற ஒரு சிலர் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக எமது ஆட்சியில் அமைச்சுப் பதவிகளைப் பெறப்போவதாக பலவாறான வதந்திகளைப் பரப்பி வருகின்றனர். தேசிய மக்கள் சக்தி, மக்களுக்கு சார்பான அரசாங்கம். இந்த அரசாங்கத்தில் மக்களுக்குத் துரோகம் செய்த மக்களை கஷ்டப்படுத்திய எவரையும் உள்வாங்க மாட்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியத்தை அகற்ற தேசியக் கட்சிகள் முனைப்பு



## இடமளிக்கக்கூடாதென இந்து சமயப் பேரவை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 11

தமிழ்த் தலைமையை அழிப்பதன் மூலம் தமிழ் தேசியத்தை இந்த நாட்டில் இருந்து அப்புறப்படுத்தி விடுவதற்கு தேசியக் கட்சிகள் முனைகின்றன. இதனைத் தடுப்பதற்கு தமிழ்த் தலைவர்களிடையே ஒற்றுமை அவசியம் என்று இந்து சமயப் பேரவை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் பேரவையின் தலைவர் சக்திகிரீவன் தெரிவிக்கையில்,

தேசியக் கட்சிகள் குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பதற்கு முனைகிறார்கள். இதற்கு தமிழ் இளைஞர்கள் இரையாகுவது மனவேதனை அளிக்கிறது. தமிழ்த் தலைமைகளின் ஒற்றுமையின்மையை அழிப்பதன் மூலம் தமிழ்த் தேசியத்தை இந்த நாட்டில் இருந்து அப்புறப்படுத்தி விடுவதற்கு முயலுகின்றார்கள். இந்த நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து தமிழ் மக்கள் பட்ட துன்பங்கள் சொல்லில் அடங்காது. இதற்கு ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாது இருப்பது தமிழினத்தைப் பூண்டோடு அழிக்கவேண்டும் என்ற கபட நோக்கமே. தமிழ் மக்களை கூறு போடுகின்ற நடவடிக்கையில் ஈடுபடுகின்ற தேசிய தலைவர்கள் எமக்கு ஒருபோதும் உரிமையை வழங்க மாட்டார்கள்.

இதனையுணர்ந்து மக்களின் உரிமைகளுக்காக தமிழ்த் தலைமைகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். (ச-10)





மாவீரர் நாளை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டத்தின் தேராவில் துயிலும் இல்லத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்கள் இணைந்து சிரமதான பணியில் ஈடுபட்டனர். (ச-113)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதியவர்களே ஊழலற்றவர்கள் அவர்களையே மக்கள் வெல்லவைப்பார்கள்

## சொல்கிறார் இளங்குமரன்



தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர் இளங்குமரன் வழங்கிய நேர்காணல் இது.

நேர்கண்டவர்: யாழின்பன்

**கே: யாழ். தேர்தல் மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் தேர்தலில் மக்களுக்கு அதிகம் பரிச்சயமில்லாத புதியவர்களே களமிறக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு பரிச்சயமற்ற புதியவர்களால் தேர்தலில் வெற்றியீட்ட முடியுமா?**

ப: மக்களுக்கு நாங்கள் பரிச்சயம் இல்லையென்பதைவிட அரசியல்வாதிகளுக்கு நாங்கள் பரிச்சயம் இல்லை. நான் கடந்த பத்து வருடங்களாக அரசியலில் இருக்கின்றேன். அதற்கு முதலும் தேர்தல் களத்தில் பங்குபற்றியிருந்தேன். அன்றைய காலத்தில் எனது சொந்த அண்ணா கூட எனக்கு வாக்களிக்கவில்லை. அரசியல் எமக்குப் புதிது இல்லை. இந்தக்குறுகிய பத்து வருட காலத்துக்குள் அரசியலையும், மக்களின் பிரச்சினைகளையும் நாம் உணர்ந்திருக்கிறோம். கண்டிப்பாக இதற்கு முதலும் அநுரகுமார திஸாநாயக்க தோழரையும் இவர் பரிச்சயம் இல்லாதவர், உலக நாட்டுத் தொடர்புகளைத் கையாளத் தெரியாதவர்கள் என்று பெரிய அரசியல்வாதிகள் என்று கூறிக்கொள்பவர்கள் இளக்காரமாகச் சொன்னார்கள். எம்மைப் பொறுத்தவரைக்கும் நான் கடந்த பத்து வருடங்களாக அரசியல் பயணத்தை மேற்கொண்டிருக்கிறேன். ஆனால் மக்கள் எம்மை அன்று தேடவில்லை. இன்று தேசிய மக்கள் சக்தியைத் தேடுகிறார்கள். இன்று தேசிய மக்கள் சக்தியில் இருப்பவர்கள் யார் ,எவர் என்று தேடி அணியாகத் திரள்கிறார்கள். நாங்கள் அரசியலுக்குப் புதியவர்கள் அல்லர், பழையவர்கள்தான். ஆனால் நாங்கள் மக்கள் மத்தியில் பிரபலமாகவில்லை.

அநுரகுமார திஸாநாயக்க தோழர் கூட தான் ஜனாதிபதி வேட்பாளராக நிற்பதற்கு முதலில் விரும்பவில்லை. ஏனென்றால் 'நான் சிறியவன். இங்கே இருப்பவர்களில் பெரியவர்களைப் போட வேண்டும், படித்தவர்களைப் போடவேண்டும், மக்கள்மத்தியில்பிரபலமானவர்களைப் போட வேண்டும்' என்று சொன்னார். ஆனால் இன்று நாட்டின் ஜனாதிபதியாக சாதித்துக் காட்டியுள்ளார்.

துடிப்புள்ள இளைஞர்களை வேட்பாளர்களாக்கினால் மக்களுடன் அந்நியோன்னியமாகப் பழகுவார்கள். இதுவரை இருந்த அரசியல்வாதிகளைப் பாருங்கள் அவர்கள் மக்களுடன் அந்நியோன்னியமாகப் பழகவில்லை. அதனால் நாங்கள் இந்தமுறை புதிய முகங்களை மக்களுக்கு பரிச்சயமாக்கவுள்ளோம். மக்களும் இந்தப் புதிய முகங்களைத்தான் ஏற்கிறார்கள். இந்த அணியில் புதிய இளைய தலைமுறைகள் உருவாகியிருக்கின்றன. இவர்கள் இலஞ்சம், ஊழல் ஆகியவற்றில் ஈடுபடாதவர்கள் என்பதையும் இந்த இடத்தில் கூறிக்கொள்கிறேன்.

**கே: கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நாடாளவிய ரீதியில் தேசிய மக்கள் சக்தி முன்னிலை பெற்றிருந்தாலும், யாழ்ப்பாணத்தில் அவ்வாறு முன்னிலை பெறமுடியவில்லை. இந்தநிலையில் நாடாளுமன்றத் தேர்தலில் உங்கள் கட்சி எத்தனை ஆசனங்களைக் கைப்பற்றுமென எண்ணுகிறீர்கள்?**

ப: ஜனாதிபதித் தேர்தல் களத்தைப் பொறுத்தவரை நாங்கள் முதன்மை இடத்தைப் பெறவில்லை என்பது உண்மைதான். ஆனால் விகிதாசாரத்தின் அடிப்படையில் பார்த்தோமானால் ஒட்டுமொத்த இலங்கையிலுமே எமக்கு யாழ். மாவட்டத்தில்த்தான் சடுதியான வாக்கு அதிகரிப்பு வீதம் ஏற்பட்டுள்ளது. அதனால் யாழ் .மக்கள் மாற்றத்தை விரும்பியிருக்கிறார்கள். 'எமக்கு வாக்களிக்காதவர்களையும் அரவணைத்துக்கொண்டுதான் இந்த நாட்டை முன்னேற்றப் போகிறோம் ' என்றார் அநுரகுமார திஸாநாயக்க. வடமாகாணத்தைப் பொறுத்தவரை எமக்கு ஜனாதிபத்தேர்தலில் வாக்களிக்காத மக்களும் இந்த முறை நாடாளுமன்றத் தேர்தலில் திசைகாட்டிக்குத்தான் வாக்களிக்க வேண்டும் என்ற எண்ணப்பாட்டுடன் இருக்கின்றனர். இந்த எண்ணம் கிராமமட்டந்தோறும் தோன்றியுள்ளது. அதனால்தான் நாங்கள் பிரசா ரத்திற்குச் செல்லும்போது எல்லோரும் அன்புடனும் அரவணைப்புடனும் உணவும் தந்து உபசரிக்கிறார்கள். மக்களின் இந்த அன்பைப் பார்க்கும் போது, நாம் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் ஆறு ஆசனத்தையும் வெல்லக் கூடிய சந்தர்ப்பமே அதிகம்.

**கே: பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவோமென்று அநுரகுமார திஸாநாயக்க, ஜனாதிபதித் தேர்தலின்போது வாக்குறுதி கொடுத்திருந்தார். ஆனால் இப்போதோ அந்தச் சட்டத்தை நீக்க அரசாங்கம் பின்னடிப்பது போல இருக்கின்றதே?**

ப: அநுரகுமார திஸாநாயக்க தோழர் கொடுத்த வாக்குறுதியை கண்டிப்பாக நிறைவேற்றுவார். அதனால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அவர் நிச்சயம் நீக்கியே தீருவார். இனியும் இன விரிசல்களை ஏற்படுத்தும் எந்தவொரு நடவடிக்கைக்கும் இடமளிக்கோம். மும்மொழிக்கும் சம அந்தஸ்து கொடுப்போம். ஜனாதிபதி செயலகத்தில் கூட தமிழர்களை நியமிக்கவேண்டும் என்பதே அநுரவின் விருப்பம். அவ்வளவு ஏன், வடக்கு ஆளுநராகக் கூட ஒரு தமிழரை. அதுவும் கட்சி சாராத ஒருவரையே நாங்கள் நியமித்துள்ளோம். நீண்டகாலம் விடுவிக்கப்படாதிருந்த வசாவிளான் - பலாலி வீதியை. ஆளுநரின் கோரிக்கையின் பேரில், திறந்துவைத்தோம். ஆனால் அந்த வீதியை தாங்கள் சொல்லியே நாம் திறந்ததாக சிலர் உரிமை கொண்டாடுகின்றனர். உண்மையில் ஆளுநர்தான் அவ்வாறு கோரிக்கையை முன்வைத்தாரே தவிர வேறெந்தக் கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதிகளும் அப்படிக் கோரவில்லை. எதிர்காலத்தில் நாட்டில் கட்டமைப்பு மாற்றத்தைக் கொண்டு வந்து, நாட்டையும், தமிழர் பகுதிகளையும் முன்னேற்றப் பாதையில் கொண்டுசெல்ல எமது கட்சி அர்ப்பணிப்போடு செயற்படும்.



**கே: நீங்கள் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றியீட்டினால், உடனடியாக என்னென்ன மாற்றங்களை எமது பிரதேசத்தில் ஏற்படுத்துவீர்கள்?**

ப: யுத்தத்துக்கு முன்னைய காலத்தை எடுத்துக்கொண்டால் யாழ்ப்பாணம் பொருளாதாரத்திலும் தொழிற்சாலைகளுக்கும் பேர்போன இடம். ஆனால் இன்று அவை எல்லாமே சீரழிக்கப்பட்டு 2009க்குப் பிறகு வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தக்கூடிய. தொழிற்சாலைகள் வடமாகாணத்தில் உருவாகவில்லை. ஆனையிறவு உப்பளத்தை எடுத்துக்கொண்டால் இன்று செயலிழந்திருக்கின்றது. உப்பு எமது நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படுகிறது. இந்த ஆனையிறவு உப்பளத்தின் மூலம் ஒட்டுமொத்த இலங்கைக்கும் தேவையான உப்பை ஆறுமாதத்தில் உற்பத்தி செய்வதே எமது இலக்கு. அந்த இல்க்கைக் கண்டிப்பாக நடைமுறைப்படுத்துவோம். தொழிற்சாலைகள் இல்லாததனால் தான் வாள்வெட்டுக் கலாசாரம் உருவாகியிருக்கிறது. கசிப்பு, கஞ்சா புழக்கமும் ஏற்பட்டுள்ளது. இவற்றை எவரும் விருப்பத்துடன் செய்வதில்லை. ஏனெனில் அவர்களது குழந்தைகள்கூட அந்தத் தொழிலைச் செய்பவர்களை ஒதுக்கியே வைக்கிறார்கள். இத்தகைய நிலையை நாம் மாற்றுவோம். எதிர்வரும் காலத்தில் யாழ் .மாவட்டத்தில் சிறந்த சமுதாயத்தினரை உருவாக்குவதற்கு நாங்கள் பாடுபடுவோம்.

எதிர்காலத்தில் நாட்டில் கட்டமைப்பு மாற்றத்தைக் கொண்டுவந்து, நாட்டையும், தமிழர் பகுதிகளையும் முன்னேற்றப் பாதையில் கொண்டுசெல்ல எமது கட்சி அர்ப்பணிப்போடு செயற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரமாரியான மோதலுடன் வன்னி தேர்தல்களம்!



■ பா.குமுதன்

மீண்டும் ஒருவிகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையிலான பொதுத்தேர்தல் ஒன்றுக்கு நாடு முகங்கொடுத்துள்ளது. நாட்டில் அரசியல் மாற்றம் ஒன்று ஏற்பட்டு புதிய ஜனாதிபதி ஆட்சிக்கு வந்துள்ள நிலையில் இடம்பெறும் நாடாளுமன்றத் தேர்தல் பல்வேறு வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது. அதனடிப்படையில் 196 நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்றுக்கொள்வதற்காக, அரசியல் கட்சிகள் சார்பாக 5 ஆயிரத்து 464 பேரும் சுயேச்சைக்குழுக்கள் சார்பில் 3 ஆயிரத்து 357 பேருமாக மொத்தம் 8 ஆயிரத்து 821 பேர் தேர்தலில் களம் காண்கின்றனர். 2023 ஆம் ஆண்டு வாக்காளர் பதிவேட்டின் பிரகாரம் ஒருகோடியே 74 இலட்சத்து 30 ஆயிரத்து 354 பேர் இந்தத்தேர்தலில் வாக்களிக்கத்தகுதி பெற்றுள்ளனர். இதுவரை சோபையிழந்து காணப்பட்ட தேர்தல்களம் வாக்களிக்கும் நாள் நெருங்கியநிலையில் ஏட்டிக்குப்போட்டியான பிரசாரங்களால் சூடுபிடித்துள்ளது வன்னித்தேர்தல் மாவட்டம். வடமாகாணத்தின் பெருநிலப்பரப்பான முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதி வன்னித்தேர்தல் மாவட்டமாக அழைக்கப்படுகின்றது. இலங்கையின் மிகக்குறைந்த வாக்காளர்களை உள்ளடக்கிய நிர்வாகமாவட்டங்களாகவும் குறைந்த வாக்காளர்களைக் கொண்டுள்ள தேர்தல் மாவட்டமாகவும் வன்னி காணப்படுகின்றது. போர் மற்றும் அதனால் ஏற்பட்டிருந்த இடப்பெயர்வுச் சூழ்நிலைகள் மாவட்டங்களின் சனத்தொகை விடயத்தில் செல்வாக்கு செலுத்தியுள்ளமையையும் மறுப்பதற்கில்லை. 1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இரண்டாம் குடியரசுயாப்பின்பிரகாரம் நடைமுறையில் இருந்த தொகுதி வாரித்தேர்தல் முறைமையில் மாற்றம் செய்யப்பட்டு விகிதாசாரத் தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்கீழ் தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்த பகுதிகள் ஒன்றிணைக்கப்பட்டு தேர்தல் மாவட்டங்களாக மாற்றப்பட்டன. ஒவ்வொரு நிர்வாகமாவட்டங்களும் தனித்தனி தேர்தல் மாவட்டங்களாக மாற்றப்பட்ட நிலையில் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்கள் குறைந்த அளவிலான வாக்காளர்களைக் கொண்டிருந்தமையால் அவை ஒன்றிணைக்கப்பட்டு வன்னித்தேர்தல் மாவட்டமாக உருவாக்கப்பட்டது. விகிதாசாரத் தேர்தல் முறைமையின் கீழ் 6 ஆசனங்கள் அதற்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

## அதிகரித்த வாக்காளர்கள்

மூவின மக்களையும் உள்ளடக்கிய வன்னியில் மிகப்பெரும்பான்மையாக தமிழ்மக்கள் வசித்துவருகின்றனர் 2023 ஆம் ஆண்டின் வாக்காளர் பதிவேட்டின் பிரகாரம் வன்னிமாவட்டம் 306, 081 பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களைக் கொண்டுள்ளது.

இனரீதியாக வாக்காளர்களின் எண்ணிக்கையினை நோக்கும்போது அண்ணளவாக 2 இலட்சத்து 40ஆயிரம் தமிழ்வாக்காளர்களையும் , 45ஆயிரம் முஸ்லிம் வாக்காளர்களையும், 22ஆயிரம் சிங்களவாக்காளர்களையும் கொண்டுள்ளது. சிங்களவாக்காளர்கள் அதிகமுள்ள மாவட்டமாக வவுனியா காணப்படுவதுடன் கணிசமான சிங்களமக்கள் வாழ்ந்துவருகின்ற பகுதியாகவும் அது உள்ளது. ஈழ விடுதலைப்போரின்போதும் போருக்குப் பின்னரும் சனத்தொகை விகிதாசாரத்தை மாற்றிமைக்கும் நோக்குடன் ஆட்சியில் இருந்த அரசுகளால் திட்டமிட்டு மேற்கொள்ளபட்ட குடியேற்றங்களால் அந்தநிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

432 பேர்தேர்தல்களத்தில் நாடாளுமன்றத்தேர்தலில் வன்னியில் வெறும் ஆறு ஆசனங்களை பெற்றுக்கொள்வதற்காக 24 அரசியல் கட்சிகளும், 27 சுயேச்சைக்குழுக்களும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளன. அவற்றில் 2 சுயேச்சைக் குழுக்களினதும், 2 கட்சிகளினதும் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன. மாவட்டத்தெரிவத்தாட்சிஅலுவலரால் நிராகரிக்கப்பட்ட ஜனநாயக தேசியகூட்டணியின் வேட்புமனு உயர்நீதிமன்றின் உத்தரவிற்கமைய மீளவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்த வகையில் 432 பேரின் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆறுஆசனங்களுக்காக 432 பேர் போட்டியிடுகின்றமை பல்வேறு தரப்புகளிலும் விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது.

## பிரதான கட்சிகள்

வன்னியில்போட்டியிடும் பிரதானகட்சிகளாக இலங்கைத் தமிழரசுக்கட்சி, அகில இலங்கைத்தமிழ் காங்கிரஸ், ஜனநாயகதமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழர்விடுதலைக்கூட்டணி ஆகியனவும் மற்றும் தேசியகட்சிகளாக தேசியமக்கள்சக்தி, ஐக்கியமக்கள்சக்தி, ஈழமக்கள் ஜனநாயககட்சி, ஜனநாயதேசியகூட்டணி ஆகியன களத்தில் இறங்கியுள்ளன. 2010 மற்றும் 2015ஆம் வருடங்களில் இடம்பெற்ற நாடாளுமன்றத்தேர்தலில் வன்னிமாவட்டத்தில் கட்சிகள் பெற்றுக்கொண்ட வாக்குகள் மற்றும் ஆசனங்களின் எண்ணிக்கை முறையே வருமாறு,

2010 நாடாளுமன்றத்தேர்தலில் தமிழரசுக்கட்சி 41, 673 வாக்குகள் (38.96 வீதம்) 3 ஆசனங்கள், ஐ.ம.சு.கூட்டமைப்பு 37,522 (35.07 வீதம்) 2, ஐக்கியதேசியகட்சி 12,783 (11.95 வீதம்) 1, புளட் 5,900 (5.52 வீதம்) ஈ.பி.டி.பி. 2,867 (2.68வீதம் ) ஈழவர் ஜனநாயகமுன்னணி 1,394 (1.30 வீதம்) ஆகும். பதிவுசெய்யப்பட்ட மொத்த வாக்குகள் 266,975, அளிக்கப்பட்ட வாக்குகள் 117,185(43.89 வீதம் ) நிராகரிக்கபட்ட வாக்குகள் 10, 208 (8.71வீதம்), செல்லுபடியான வாக்குகள் 106,977 ஆகும்.

2015 நாடாளுமன்றத்தேர்தலில் தமிழரசுக்கட்சி 89,886 வாக்குகளையும் (54.55வீதம்) 4 ஆசனங்களையும், ஐக்கியதேசியகட்சி 39,513 (23.98வீதம்) 1, ஐ.ம.சு.கூட்டமைப்பு 20, 965 (12.72வீதம் ) 1, முஸ்லீம்காங்கிரஸ் 5,716 (3.47வீதம்) ஈ.பி.டி.பி. 2,120 (1.29வீதம்) அ.இ.தமிழ்காங்கிரஸ் 1,174 (0.71வீதம்) ஆகும். பதிவுசெய்யப்பட்ட மொத்த வாக்குகள் 253,058 அளிக்கப்பட்டவாக்குகள் 181, 930 (71.89வீதம்) நிராகரிக்கபட்ட வாக்குகள் 17, 155(9.43வீதம்), செல்லுபடியான வாக்குகள் 164,775 ஆகும்.

மேலேகாட்டப்பட்டுள்ள புள்ளிவிவரங்களுக்கமைய 2010 ஆம் ஆண்டுத்தேர்தலில் மிகவும் குறைந்தளவில் வாக்களிப்பு இடம்பெற்றுள்ளது. 2009 ஆம் ஆண்டு இறுதிப் போர்நிறைவுற்று ஒருவருடங்கள் கடந்தநிலையில் தேர்தல் நடத்தப்பட்டது. போரில்பேரழிவுகளை சந்தித்திருந்த வன்னிமக்கள் தேர்தல்மீது அதிகமாக ஆர்வம்காட்டவில்லை. அத்துடன் நலன்புரி முகாம்களில் தங்கியிருந்த நிலையில் அவர்கள் தமது வாக்குகளைச் செலுத்தியிருந்தனர். இதனால் அத்தேர்தலில் வாக்களிப்பு சதவிகிதம் குறைந்திருந்தது. தேர்தல்முடிவுகளின் பிரகாரம் தமிழரசுக்கட்சி 3 ஆசனங்களையும் முன்னாள்ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தலைமையிலான ஐக்கியமக்கள்சுதந்திரக் கூட்டமைப்பு 2 ஆசனங்களையும் ஐக்கியதேசியக் கட்சி ஒரு ஆசனத்தையும் பெற்றுக்கொண்டன. இந்தத் தேர்தலில் தமிழரசுக்கட்சிக்குக் கிடைத்த ஆசனங்கள் தவிர்ந்த ஏனைய மூன்றுஆசனங்களும் முஸ்லிம் பிரதிநிதித்துவமாகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தன. தமிழ்மக்களின்வாக்களிப்பு வீதம் குறைந்திருந்தமையால் 20 தொடக்கம் 30 ஆயிரம் வாக்காளர்களைக் கொண்டிருந்த முஸ்லிம் சமூகத்தில் இருந்து மூவர் நாடாளுமன்றுக்குத் தெரிவுசெய்யப்பட்டனர். அவர்களில் அதிகமான விருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொண்டிருந்த ரிசாட்பதியுதீன், கினைஸ்பாருக் நூர்தீன்மசூர் ஆகியோர் நாடாளுமன்றுக்கு சென்றனர். வாக்களிப்புவிகிதம் குறைந்திருந்தமையால் ஏகப்பெரும்பான்மையாக தமிழர்களைக்கொண்ட வன்னியில் இவ்வாறான ஒரு நிலைமை ஏற்பட்டிருந்தது. அந்தத் தேர்தலில் சித்தார்த்தன் தலைமையில் தனித்து போட்டியிட்டிருந்த புளொட் அமைப்பு கணிசமானவாக்குகளை பெற்றிருந்தபோதும் ஆசனங்கள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

2010 தேர்தலில் ஐ.ம.சு.கூ. கட்சி சார்பில் ரிசாட் பதியூதீன் 27,461, கினைஸ் 10,851, தமிழரசுக்கட்சி சார்பில் அ. அடைக்கலநாதன் 17,366 வினோநோகராதலிங்கம் 12,120, சிவசக்தி ஆனந்தன் 11,674, ஐக்கியதேசியகட்சியின் நூர்தீன் மசூர் 9,518 என வாக்குகளைப் பெற்றுக் கொண்டனர்.

பின்னர் இடம்பெற்ற 2015 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் வாக்களிப்பு சதவிகிதம் 71 ஆக அதிகரித்திருக்கின்றமையைக் காணலாம். இந்தத்தேர்தலில் தமிழரசுக்கட்சி 4 ஆசனங்கள், ஐக்கியதேசியக்கட்சி ஒன்று, ஐக்கிய மக்கள்சுதந்திரக்கூட்டமைப்பு ஒன்று என ஆசனங்களை பெற்றுக்கொண்டன. 2010 தேர்தலில் தனித்து போட்டியிட்டிருந்த புளொட் இம்முறை தமிழரசுக்கட்சியுடன் இணைந்துபோட்டியிட்டிருந்தது. அதேபோல கடந்ததேர்தலில் ஐக்கியமக்கள் சுதந்திரக்கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிட்டிருந்த ரிசாட்பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள்காங்கிரஸ் இந்தத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிட்டிருந்தது. 2015தேர்தல் முடிவுகளின்படி 4 தமிழ்பிரதிநிதித்துவமும் 2 முஸ்லிம் பிரதிநிதித்துவமும் கிடைத்தன.

2015 தேர்தலில் விருப்புவாக்குகள் தமிழரசுக்கட்சி சார்பில் போட்டியிட்ட சாள்ஸ் நிர்மலநாதன் 34,620, அ. அடைக்கலநாதன் 26,397 சிவசக்திஆனந்தன் 25,027, சி.சிவமோகன் 18,412, ஐ.ம.சு.கூட்டமைப்பபு சார்பில் காதர் மஸ்தான் 7,298, ஐக்கியதேசியக்கட்சி சார்பில் ரிசாட்பதியூதீன் 26,291 வாக்குகளைப் பெற்றுக்கொண்டனர். 2020 நாடாளுமன்றத்தேர்தலில் தமிழரசுக்கட்சி 69, 916 வாக்குகள் (33.64வீதம்) 3 ஆசனங்கள், பொதுஜனபெரமுன 42,524(20.46வீதம்) 1, ஐக்கியமக்கள் சக்தி 37,883 (18.23வீதம்) 1, ஈழமக்கள் ஜனநாயக கட்சி 11,310(5.44வீதம்) 1, தமிழர் சமூக ஜனநாயக கட்சி 10,064(4.84வீதம்), தமிழ்மக்கள் தேசியகூட்டணி 8,789 (4.23வீதம்), அகில இ.தமிழ்காங்கிரஸ் 8,232 (3.96வீதம்), ஐக்கியதேசிய கட்சி 1,316(0.63வீதம்), ஜனநாயகஇடதுசாரி முன்னணி 1,308(0.63வீதம்) தேசியமக்கள் சக்தி 662(0.32வீதம்), தமிழர் விடுதலைக் கூட்டணி 424(0.20வீதம்) ஆகும்.

(மறுபக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரமாரியான....






(தொடர்ச்சி)

பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்கள் 287,024, அளிக்கப்பட்ட வாக்குகள் 224, 856 (78.34வீதம்) செல்லுபடியான வாக்குகள் 207,837 (72.41வீதம்), நிராகரிக்கப்பட்ட வாக்குகள் 17,019 (5.93வீதம் 2020 இல் பொதுத்தேர்தலில் தமிழ்த்தேசியகூட்டமைப்பாக போட்டியிட்டிருந்த தமிழ்த்தேசியகட்சிகள் 3 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டன. சிவசக்தி ஆனந்தன் அதிலிருந்து வெளியேறி தமிழ்மக்கள் கூட்டணி என்ற புதியகட்சியில் போட்டியிட்டிருந்தார். அந்தக்கட்சியும் தமிழ்த்தேசியமக்கள் முன்னணியும் முறையே 8, 870மற்றும் 8, 232 வாக்குளைபெற்றிருந்தது. ஆசனங்கள் கிடைக்கப்பெறவில்லை இருப்பினும் ஈ.பி.டி.பி.க்கு கிடைக்கப்பெற்ற ஒரு ஆசனத்துடன் சேர்த்து தமிழர்பிரதிநிதித்துவம் 4 ஆகக் காணப்பட்டது.

2020 தேர்தலில் தமிழரசுக்கட்சி சார்பில் போட்டியிட்ட சாள்ஸ் நிர்மலநாதன் அடைக்கலநாதன் 18,563, வினோநோகராதலிங்கம் 15,190 வாக்குகளைப் பெற்றனர். பொதுஜனபெரமுன சார்பில் காதர் மஸ்தான் 13,454, ஜனக நந்தகுமார 12,999 வாக்குகளைப் பெற்றனர். ஐக்கியமக்கள் சக்தி சார்பில் றிசாட் பதியூதீன் 28,203, ஈ.பி.டி.பி. சார்பில் கு.திலீபன் 3,203 வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்தனர். அதேபோல் தமிழரசுக்கட்சி சார்பில் மயூரன் 9,518, ரி.லிங்கநாதன் 8,563, ப.சத்தியலிங்கம் 12,162, சி.சிவமோகன் 10,581,க.சிவலிங்கம் 12,714 வாக்குகளையும், தமிழர் சமூகஜனநாயககட்சி ப.உதயராசா 10,064, ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் கினைஸ்பாருக் 12,120 வாக்குகளையும் பெற்று தோல்வியடைந்தனர்.

## சிதைவடைந்த வீட்டுச்சின்னம்

இதுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக போட்டியிட்டு வந்த தமிழரசுக்கட்சி இம்முறை தனித்துவீட்டுசின்னத்திலும், புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ, ஜனநாயகப் போராளிகள்கட்சி என்பன ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியாக சங்குச்சின்னத்தில் களம் இறங்கியுள்ளன. இது தமிழ்வாக்குகள் சிதறக்கூடிய ஒருநிலையினை ஏற்படுத்தியுள்ளது. தொடர்ச்சியான தேர்தல்களில் அதிக ஆசனங்களை எடுத்துவந்த தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு இம்முறை தேர்தல்விஷப்பரீட்சையாக மாறியுள்ளதுடன், களநிலவரங்களின் படி ஐக்கிய மக்கள் சக்தி அந்த வாய்ப்பினை பெற்றுக்கொள்ளவதற்கான சந்தர்ப்பங்களையும் உருவாக்கியுள்ளது. 2020 தேர்தலில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான கினைஸ் பாருக், ரிசாட் பதியுதீன் ஆகியோர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கியமக்கள் சக்தியில் போட்டியிட்டிருந்தனர். அந்தத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி 37,733 வாக்குகளைப் பெற்றிருந்தது. இம்முறையும் அதேகட்சியில் போட்டியிடுவதுடன் சிங்களவாக்குகளைப் பெறுவதற்காக அந்த மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நீல்சாந்த, ரசிக்காபிரியதர்சினி ஆகியோருடன் தமிழ் வேட்பாளர்களையும் ஐக்கிய மக்கள் சக்தி இம்முறை களம் இறக்கியுள்ளது. இது முஸ்லிம் வாக்குகளை மாத்திரம் அல்லாமல் சிங்கள தமிழ் வாக்குகளையும் அந்தக் கட்சிக்குப் பெற்றுக் கொடுக்கும். இந்தநிலைமை அவர்களுக்குமேலதிக ஆசனம் செல்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரான காதர் மஸ்தான் இம்முறை தனித்துக் களம் காண்கின்றார். இது ஐக்கிய மக்கள் சக்திக்கு கிடைக்கின்ற முஸ்லிம் வாக்குகளில் சிறிய தாக்கத்தினையும் செலுத்தவல்லது. தமிழரசுக் கட்சியின் தனிநபர் ஆதிக்கம் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளினால் தமிழ்மக்கள் தொடர்ச்சியாக ஏமாற்றமடையும்நிலை போன்றவை மக்களுக்கு தேசியத்தின்பால் அவநம்பிக்கையினை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் தமிழரசுக்கட்சியில் புதிய, அரசியல்அனுபவ மற்றவேட்பாளர்கள் களம் இறங்கியுள்ளனர். சங்குக்கூட்டணியின் தெளிவில்லாத அரசியல்நிலைப்பாடுகள் இம்முறை வாக்களிப்பில் பிரதிபலிக்கும். இருப்பினும் இந்தக்கட்சிகளுக்கு மாற்றான ஒரு பலமான அரசியல் கட்டமைப்பு தமிழ்த்தரப்பில் இதுவரை உருவாகவில்லை. அந்தவகையில் மேலே குறிப்பிட்ட கட்சிகளுக்கே இம்முறையும் தமிழ்மக்களின் பெரும்பான்மையான வாக்குகள் அளிக்கப்படக்கூடிய நிலை காணப்படுகின்றது. இந்தக் கட்சிகளுக்கும் அப்பால் சிறிரெலோ கட்சியின் ப.உதயராசா, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.டி.பி. ஆகிய கட்சிகளுக்கும் வன்னியில் கணிசமான வாக்குவங்கி இருக்கின்றது. ஒரு ஆசனத்தைப் பெறுவதற்காக இந்தக் கட்சிகளுக்கு மத்தியிலும் கடுமையான போட்டி நிலவுகின்றது.

## சிங்களப் பிரதிநிதித்துவம்

கடந்த 4 நாடாளுமன்றத்தேர்தல்களிலும் வன்னித்தேர்தல் மாவட்டத்தில் சிங்களப்பிரதிநிதித்துவம் ஒன்றுகூடப் பெற்றுக்கொள்ளப்படவில்லை. 1994 மற்றும் 2000 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற தேர்தல்களில் தமிழ் வேட்பாளர்களின் ஆதரவுடன் விருப்புவாக்குகளின் அடிப்படையில் சிங்கள உறுப்பினர்கள் வெற்றிபெற்ற சந்தர்ப்பங்கள் உண்டு. எனினும் நிகழ்காலத்தில் வன்னியில் கணிசமான அளவு சிங்கள வாக்காளர்கள் உருவாகியுள்ளனர். இம்முறை தேர்தலில் தமிழ்மக்களது வாக்களிப்பு விகிதம் குறைவடைந்தாலோ அல்லது அது சிதறடிக்கப்பட்டாலோ சிங்களப்பிரதிநிதித்துவம் ஒன்று ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன. அதனைக் கருத்தில் கொண்டே வாக்குகளைச் சிதறடிப்பதற்காக கடந்த தேர்தல்களில் அதிகமான சுயேச்சைக் குழுக்கள் களத்தில் இறக்கிவிடப்பட்டதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. இம்முறையும் வன்னியில் அதிகமான சுயேச்சைக் குழுக்கள் வேட்புமனுவினைத் தாக்கல் செய்துள்ளன.

2020 ஆம் ஆண்டுதேர்தலில் சுயேச்சைக்குழுக்கள்7.2 சதவீதமானவாக்குகளைப் பெற்றுள்ளன. ஆனால் அந்தத் தேர்தலில் 5.4 சதவீதவாக்குகளை பெற்ற ஈ.பி.டி.பி. ஒரு ஆசனத்தைக் கைப்பற்றியது. ஈ.பி.டி.பி. பெற்றுக் கொண்ட வாக்குகளைவிட சுயேச்சைக்குழுக்கள் 3ஆயிரம் வாக்குகளை அதிகம் பெற்றுள்ளன. இவ்வாறு பிரிந்து செல்லும் வாக்குகள் வெற்றி, தோல்விகளில் மறைமுகமாக செல்வாக்கைச் செலுத்துகின்றன. ஒருசில சுயேச்சைக்குழுக்களைத் தவிர மற்றையவற்றில் அநேகமானவை எந்தக்கொள்கையும் இல்லாமல் களம் இறங்குபவையாகவே உள்ளன

## வன்னியிலும் அநுர அலை

ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள அநுரவின் தேசியமக்கள் சக்திக்கு வாக்களிக்க வேண்டும் என்ற ஒரு நிலைப்பாடு தமிழ்மக்களின் இளையவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி தமிழர்பகுதிகளில் தனது வாக்கு சதவிகிதத்தை அதிகரித்திருக்கிறது. அந்தவகையில் பொதுத் தேர்தலிலும் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்க வேண்டும் என்ற நிலைப்பாடு வன்னிமக்களில் சிலர் மத்தியில் இருக்கின்றது. தேசிய மக்கள் சக்தியில் வன்னிமாவட்டம் சார்பாக 5 தமிழ்வேட்பாளர்களும் 2 சிங்களவேட்பாளர்களும் 2 முஸ்லிம்வேட்பாளர்களும் களம் இறக்கப்பட்டுள்ளனர். ஜனாதிபதித் தேர்தலில் பெரும்பான்மை சிங்கள மக்கள் மாற்றம் ஒன்றை விரும்பி வாக்களித்து நாட்டின் தலைவரை மாற்றியமைத்துள்ளனர். அந்தவகையில் பொதுத்தேர்தலில் வன்னியில் உள்ள சுமார் 22 ஆயிரம் சிங்களவாக்குகளில் பெரும்பான்மை தேசியமக்கள் சக்திக்கு விழுவதற்கே வாய்ப்பு இருக்கின்றது. எனவே அதில் போட்டியிடும் தமிழ்வேட்பாளர்கள் விருப்பு வாக்குகளை அதிகம் பெறாவிடில் தமிழ்மக்களின் வாக்குகளும் சேர்ந்து சிங்களப்பிரதி நிதித்துவம் ஒன்றை ஏற்படுத்தும். இதேவேளை 2020 தேர்தலில் பொதுஜன பெரமுனவில் போட்டியிட்ட சிங்கள வேட்பாளரான ஜனகநந்தகுமார வெறும் 454 வாக்குகளால் தோல்வியடைந்திருந்தார். அவரைவிட 454 வாக்குகள் அதிகம்பெற்ற காதர் மஸ்தான் நாடாளுமன்றுக்குத் தெரிவுசெய்யப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தமிழர் பிரதிநிதித்துவம்

வறுமை, தொழிலின்மை, அரசியல், உரிமை, அபிவிருத்தி என அனைத்து விடயங்களுக்கும் வன்னித்தமிழ் மக்கள் ஏங்கிநிற்கும் நிலையில் இந்தத் தேர்தலை சந்திக்கின்றனர். வன்னித்தேர்தல் மாவட்டத்தின் தமிழ் வாக்காளர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது 5 தமிழ்ப்பிரதிநிதித்துவங்களை இலகுவாகப் பெற்றுக் கொள்ளமுடியும். கடந்த 2004 ஆம்ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் 90,252 வாக்குகளைப் பெற்றுக் கொண்ட தமிழரசுக்கட்சி 5 தமிழ்ப்பிரதிநிதித்துவங்களைப் பெற்றது. அந்தத்தேர்தலில் விடுதலைப்புலிகளின் ஆதரவும் தமிழரசுக்கட்சிக்கு இருந்தது. எனினும் 2010, 2015, 2020 ஆகிய தேர்தல்களில் முறையே 3, 4, 4 பிரதிநிதித்து வங்களே கிடைக்கப்பெற்றன. தமிழ்மக்கள் வாக்களிப்பில் அதிகமாக நாட்டம் காட்டாமை, தமிழ்க்கட்சிகள் பிரிந்துநின்று தேர்தலைச் சந்திக்கின்றமை, அத்தோடுதமிழ்த்தேசியத்தின் மீது நம்பிக்கை இழந்த மக்கள் வேற்று இனத்தவர்களுக்கு வாக்களிக்கின்றமை போன்ற விடயங்கள் 5 ஆசனங்களைப் பெற்றுக்கொள்வதில் தமிழ்த்தரப்புக்கு சவால்களை ஏற்படுத்தியுள்ளன. கடந்ததேர்தல்களில் வன்னியில் பெரும்பான்மை ஆசனங்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கே கிடைத்திருந்தது அந்தவகையில் விகிதாசாரத் தேர்தல் முறையினூடாக இரண்டாம் சுற்றில் அதிகவாக்குகளைப் பெற்ற ஏனையகட்சிகள் ஒரு ஆசனத்தைப் பெற்றுவந்தன. ஆனால் இம்முறை தமிழ்க்கட்சிகளுக்குடையிலான பிளவுகள் மற்றும் அதிகரித்த சுயேச்சைக் குழுக்கள் காரணமாக தேர்தல்களம் என்றுமில்லாத வகையில் சூடுபிடித்துள்ளது.

இம்முறை முதல்மூன்று ஆசனங்களைத் தவிர்த்து ஏனைய மூன்று ஆசனங்களைப் பெற்றுக்கொள்ளும் கட்சிகளுக்கிடையில் சொற்ப அளவான வாக்குகள் வேறுபாடே இருப்பதற்கான களநிலைமை காணப்படுகின்றது. கடந்த தேர்தல்களோடு ஒப்பிடும்போது வாக்களிப்பு சதவீதம் 70 ஐ தாண்டுமாக இருந்தால் அண்ணளவாக70 தொடக்கம் 80 ஆயிரம் வாக்குகளைப்பெறும் கட்சி 3 ஆசனங்களைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளன .ஆனால் பிரிந்துநிற்கின்ற தமிழ்க்கட்சிகள் மேற்சொன்ன வாக்குகளை எடுப்பதும் சவாலான ஒரு நிலையினை ஏற்ப்படுத்தியுள்ளது. எனவே வாக்களிப்பின் முக்கியத்துவம் தொடர்பிலும், தமிழர்பிரதிநிதித்துவத்தின் அவசியம் தொடர்பிலும், வாக்குகள் பிளவடைவதால் ஏற்படும் அபாயநிலைமை தொடர்பிலும், தமிழ் வாக்காளர்கள் விழிப்புடன்செயற்படவேண்டும். தமது பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய வல்லமை கொண்ட தலைமைகளை இந்தத்தேர்தலூடாகத் தெரிவுசெய்ய வேண்டும். கடந்த மூன்று பொதுத்தேர்தல்களிலும் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டவாக்குகள் செல்லுபடியற்ற வாக்குகளாக இடப்பட்டுள்ளன. இவையும் ஆசனங்களைத் தீர்மானிப்பதில் செல்வாக்கைச் செலுத்துகின்றன. இது தொடர்பிலும் தமிழ்மக்கள் கரிசனை கொள்ளவேண்டும். தேர்தல் பரப்புரையில் ஈடுபடும் வேட்பாளர்கள் வாக்களிக்கும்முறை தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்துவது, இவ்வாறு செல்லாத வாக்குகளின் எண்ணிக்கையைக் குறைக்கவும் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தைக் காக்கவும் உதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவிகளைக் கேட்டு அநுர தரப்போடு எந்த உடன்படிக்கையும் செய்யவில்லை



**தமிழரசுக்கட்சியின் [illegible]சாளரும், அந்தக் கட்சியின் சார்பில் யாழ். மாவட்ட வேட்பாளரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் உதயனுக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணல்.**

## கூட்டமைப்பின் உடைவுக்கு நான் காரணமல்ல

நேர்கண்டவர்: யாழின்பன்

**கே:** **கடந்த காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொண்ட நீங்கள் இப்போது தமிழரசுக் கட்சியாக களம் காண்கிறீர்கள். பங்காளிக் கட்சிகள் இல்லாத வீட்டுச்சின்னத்தை மக்கள் ஏற்றுக் கொள்வார்களா?**

**ப:** தமிழரசுக் கட்சிக்கு மட்டுமே உரிய சின்னம் வீட்டுச்சின்னம். பங்காளிகளாக எங்களோடு சேர்ந்திருந்த கட்சிகள் வீட்டுச் சின்னத்திலே போட்டியிட்டனர். காலத்துக்குக் காலம் பங்காளிக் கட்சிகள் யார் என்பது மாறிக்கொண்டே இருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்டபோது இருந்த நான்கு கட்சிகளே இருந்தன. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமது ஆசனப்பங்கீடு காரணமாக 2010 இல் வெளியேறினார். 2013 இல் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆனந்த சங்கரி ஆசனங்கள் கிடைக்காமையால் வெளியேறினார். 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஈ.பி.ஆர்.எல். எப். ஆசனங்கள் கிடைக்காமையால் வெளியேறியது. இடையே தமிழரசுக்கட்சி, புளொட் ஆகியன தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் வந்தன . ஆனால் உள்ளூராட்சி சபைத் தேர்தல் 2023 நடந்தபோது தமிழரசுக் கட்சி ஒரு உபாயமாக கட்சிகள் தனித்து தேர்தலில் போட்டியிட்டு, பின்னர் சேர்ந்தால் நாங்கள் கூடுதலான ஆசனங்களைப் பெற்று அறுதிப் பெரும்பான்மையையோடு சபைகளை நிர்வகிக்கமுடியும் என்ற யோசனையை முன்வைத்திருந்தது. அதைச் சாதகமாகப் பயன்படுத்தி அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறினார்கள். வெளியேறியவர்கள் குத்துவிளக்குச் சின்னத்தை வைத்து, "டி" என்ற எழுத்தை முன்னால் இட்டு தாங்கள் தான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்று மக்களை ஏமாற்றினார்கள். ஆனால் தற்போது தங்களின் வாக்குறுதிகளை மீறி குத்துவிளக்குச் சின்னத்தைக் கைவிட்டு விட்டு.சங்குச் சின்னத்தை களவாடி தங்கள் கள்ளச் சின்னமாக வைத்திருக்கின்றனர். அவர்கள் வெளியேறியது தான் நன்மை என்பதே மக்களின் கருத்தாகக் காணப்படுகின்றது.

**கே:** **தமிழரசுக் கட்சியும் இப்போது வழக்குகள், உட்கட்சிப் பூசல்கள் என்று சிக்கல்களில் அல்லாடுகின்றது. இந்தப் பிரச்சினைகளால் மக்கள் மத்தியில் தமிழரசுக் கட்சிக்கு எதிரான அதிருப்தி அதிகரித்திருப்பதையும், அவர்கள் தமக்கான புதிய மாற்று அரசியல் கட்சிகளை நாடுவதையும் ஏற்றுக் கொள்கிறீர்களா?**

**ப:** இல்லை. அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. உட்கட்சிப் பூசல்கள் எதுவுமே கிடையாது கட்சி எடுக்கும் தீர்மானங்கள் அனைத்தும் ஏகமனதாக எடுக்கப்படும் தீர்மானங்கள் ஆகும். கட்சிக்கென ஒரு கட்டமைப்பு இருக்கின்றது. மத்திய செயற்குழு எடுக்கும் தீர்மானத்தின் அடிப்படையில் தான் கட்சி இயங்குகின்றது. கட்சிக்கு எதிரானவர்கள் மற்றும் கட்சியிலிருந்து சுயநலத்துக்காக வெளியேறியவர்கள் தான் கட்சிக்குள்ளே உட்பூசல்கள் இருப்பதாகக் கூறுகின்றனர். இதனை யாரும் நம்பவேண்டாம்.




**கே:** **தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய கஜேந்திரகுமார் முதல் இப்போது தமிழரசுக் கட்சியில் இருந்து வெளியேறிய தவராஜா, சசிகலா வரையாக அத்தனை பேரும் தங்கள் வெளியேறுகைக்கு உங்களை மட்டுமே குற்றம் சாட்டுகின்றனர். அப்படியானால் தமிழரசுக் கட்சியின் சிதைவுக்கு நீங்கள் மட்டும் தான் ஒற்றைக்காரணம் என்பதை ஏற்றுக்கொள்கிறீர்களா?**

**ப:** கஜேந்திரகுமார் கூட்டமைப்பு விட்டு வெளியேறியபோது நான் கட்சியிலேயே இருக்கவில்லை. 2010 பெப்ரவரி மாதம் அவர் வெளியேறியிருந்தார். ஆனால் நான் 2010 ஏப்ரல் மாதம் தான் அரசியலுக்குள் வந்தேன். அதனால் அவரின் வெளியேற்றத்துக்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. சசிகலா ரவிராஜும், கே.வி. தவராஜாவும் தமிழரசுக்கட்சி சார்பில் இம்முறை தேர்தலில் போட்டியிட விண்ணப்பித்திருந்தார்கள். ஆனால் அவர்களுக்குப் போட்டியிடச் சந்தர்ப்பம் கொடுக்கவில்லை என்ற காரணத்தாலேயே அவர்கள் வெளியேறியுள்ளனர். ஒருவேளை அவர்கள் போட்டியிட வாய்ப்பளிக்கப்பட்டிருந்தால், ' கட்சி நல்லது வீட்டுச் சின்னத்துக்கு வாக்களியுங்கள்' என்று எங்களோடு சேர்ந்து எல்லாக் கூட்டங்களிலும் பேசி இருப்பார்கள். அவர்கள் மட்டுமல்ல, வேட்புமனுக் கிடைக்காமல் கட்சியைவிட்டு விலகிய மற்றையவர்களும் அப்படித்தான் செய்திருப்பார்கள்.

**கே:** **தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத் தேர்தல்,பொதுச்சபை என்பன தொடர்பான வழக்குகளின் பின்னணியில் நீங்கள் இருப்பதாகவே எல்லோரும் குற்றம் சாட்டுகின்றனர். ஏனெனில் வழக்குத்தொடுநர்கள் அத்தனை பேருமே உங்களின் தீவிர ஆதரவாளர்கள். சிலர் உங்களின் கீழ் பணிபுரிவர்கள். ஆனால் அந்தக் குற்றச்சாட்டை மறுத்தே வருகின்றீர்கள். வெளிப்படையாக எல்லோருக்குமே தெரிகின்ற ஒரு விடயத்தை இவ்வாறு மறுப்பதென்பது உங்கள் மீது மக்களிடம் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தாதா?**

(மறுபக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பதவிகளைக் கேட்டு...

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

**ப:** அது இந்தத் தேர்தல் முடிவில் தெரியவரும். கட்சிக்கான தலைமைத்துவத் தேர்தல் முடிந்தவுடேனேயே தலைமைப் பதவியைப் பொறுப்பெடுக்குமாறு தெரிவு செய்யப்பட்ட தலைவருக்கு(சிறீதரனுக்கு) சொல்லியிருக்கிறேன். எழுத்துமூலமாக பகிரங்கமாகக் கடிதம் கூட எழுதியிருக்கிறேன். அவர் அதனைச் செய்யாததற்கு நான் பொறுப்பல்ல. அவர் தலைமைத்துவத்தைப் பொறுப்பெடுக்காத நிலையில், மத்திய செயற்குழுவுக்கும் மற்றைய பதவிகளுக்கும் நானும் அவரும் இணைந்து, அவர் தானே முன்மொழிந்த தெரிவுகளை மாற்ற முற்பட்ட பொழுதுதான் அந்த வழக்குகள் போடப்பட்டன. தெரிவுகளை மாற்றினால் நிச்சயம் வழக்குத் தொடுப்பேன் என முதலேயே எங்கள் மத்தியகுழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருந்தார். அவரும் ஒரு வழக்குத் தாக்கல் செய்திருக்கிறார். ஆகையால் நானெப்படி அதற்குப் பொறுப்பாக இருக்கமுடியும்?

**கே: தேசிய மக்கள் சக்தியில் நீங்கள் அமைச்சுப் பதவி பெறப்போவதாக நீங்களும் குறிப்பிட்டிருந்தீர்கள். ஆனால் அதை அந்தக் கட்சி மறுத்திருந்தது. தேர்தலுக்காக, மாற்றத்தை விரும்புவோரின் வாக்குகளுக்காக நீங்கள் அவ்வாறு சொல்கிறீர்களா? அல்லது தேசிய மக்கள் சக்தி உங்களுக்கு அமைச்சுப் பதவி தருவதாக இரகசிய வாக்குறுதி தந்துள்ளதா?**

**ப:** தேசிய மக்கள் சக்தியுடன் எமக்கு அப்படி எவ்வித இரகசிய உடன்படிக்கையும் இல்லை. ஆனால் என்னைப் பிரதமராக பொறுப்பேற்கவேண்டுமென அநுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்றில் பேசியிருக்கிறார். அது 'ஹன்சார்ட்டில்' கூட பதிவு செய்யப்பட்டுள்ளது. நாட்டில் பெரும் மாற்றம் ஏற்பட்டு, பிரதமர் பதவியைத் துறந்து, ஜனாதிபதி நாட்டைவிட்டு ஓடிய சந்தர்ப்பத்தில் அப்படி ஒரு யோசனையை அநுரகுமார தெரிவித்திருந்தார். அப்படி ஒருதடவை என்னை பிரதமராக வருமாறு கேட்டார்களே தவிர வெளிவிவகார அமைச்சராகவோ, வேறு அமைச்சராகவோ கேட்கவேயில்லை. அதைவைத்துக்கொண்டுதான் பலரும் இப்போது எனக்கு வெளிவிவகார அமைச்சை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தரப்போவதாகச் சொல்கிறார்கள். அப்படியான எந்தவிதமான உடன்பாட்டையும் நாங்கள் அவர்களோடு செய்துகொள்ளவேயில்லை.

ஆனால் இந்தத் தகவலை வெளியிட்ட உதயகம்மன்பில என்ன உள்நோக்கத்தோடு இவ்வாறு கூறுகின்றார் என்பது எங்கள் மக்களுக்குத் தெரியவேண்டும். தெற்கில் சிங்கள இனவாதத்தைக் கிளப்பவே அவர் இவ்வாறு சொல்கிறார். அத்தோடு அமைச்சுப் பதவிக்காக நான், சமஷ்டிக் கட்டமைப்புள்ள ஆட்சி, ஐ.நா.வில் போர்க்குற்ற விசாரணை நடத்துதல் என்னும் இரண்டு நிபந்தனைகளை விதித்ததாகவும் சொல்லியிருக்கிறார். ஆனால் அப்படி ஒன்றும் நடக்கவில்லை, அதுவேறுகதை. ஆனால் நாங்கள் ஒரு இணக்கப்பாட்டுக்கு வருவதென்றால் எப்படிப்பட்ட நிபந்தனைகளை விதிப்போம் என்பது உதயகம்மன்பிலவுக்கே தெரிகிறது ஆனால் எங்களை எதிர்க்கும் தரப்புகளுக்குத்தான் அது தெரிவதில்லை.

**கே: சுமந்திரன் என்ற ஆளுமை நாடாளுமன்ற விடயங்களிலும், சட்டரீதியான போராட்டங்களிலும் எல்லோரதும் அபிமானத்தைப் பெற்றவராக கொண்டாடப்படுகின்றார். ஆனால் கட்சிசார் அரசியலில் அவரது எல்லாச் செயற்பாடுகளுமே மிகமோசமாக விமர்சிக்கப்படுகின்றன. இந்த நிலை ஏன்?**

**ப:** கட்சிக்காரர் எவரும் என்னை விமர்சிக்கவில்லை. கட்சியை விட்டு வெளியேறிய சுயநலவாதிகள் மட்டுமே என்னை விமர்சிக்கின்றனர். தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படவில்லை என்பதற்காகவே இப்படி விமர்சிக்கிறார்கள். எங்கள் கட்சியில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் எல்லாமே எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகவே எடுக்கப்பட்டவை. அதனால் எங்கள் கட்சிக்காரர் விமர்சிப்பதாகச் சொல்வது தவறு.

நாட்டில் பெரும் மாற்றம் ஏற்பட்டு, பிரதமர் பதவியைத் துறந்து, ஜனாதிபதி நாட்டைவிட்டு ஓடிய சந்தர்ப்பத்தில் அப்படி ஒரு யோசனையை அநுரகுமார தெரிவித்திருந்தார். அப்படி ஒருதடவை என்னை பிரதமராக வருமாறு கேட்டார்களே தவிர வெளிவிவகார அமைச்சராகவோ, வேறு அமைச்சராகவோ கேட்கவேயில்லை. அதைவைத்துக்கொண்டுதான் பலரும் இப்போது எனக்கு வெளிவிவகார அமைச்சை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தரப்போவதாகச் சொல்கிறார்கள். அப்படியான எந்தவிதமான உடன்பாட்டையும் நாங்கள் அவர்களோடு செய்துகொள்ளவேயில்லை.

## போர் நடந்த காலத்தில் மக்களுக்கு சேவையாற்றியவர் ஈ.சரவணபவன்

### வெற்றிபெறச் செய்வது மக்களின் கடமை
### இலங்கை வங்கி முன்னாள் முகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.11

போர் நடந்த காலப்பகுதியில் 'உதயன்' மக்களுக்கு ஆற்றிய சேவைகள் எண்ணிலடங்காதவை. இக்கட்டான காலகட்டங்களில் மனம் தளராது 'உதயன்' பத்திரிகையூடாக மக்களுக்கு சேவையாற்றிய ஈ.சரவணபவனை வெற்றியாளராக்க வேண்டியது மக்களின் கடமை.

-இவ்வாறு இலங்கை வங்கியின் யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் முகாமையாளர் க.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

போர் 90ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் 'உதயன்' மக்களுக்கு எந்தப் பிரதிபலனும் எதிர்பார்க்காது செய்த சேவைகளை நான் நேரில் கண்டவன். அப்போது யாழ்ப்பாணத்தில் வங்கிகளில் பணப் பற்றாக்குறையாக இருந்த காலம். இலங்கை வங்கியின் ஊடாகவே அப்போது பணப் பரிவர்த்தனைகள் நடைபெற்றிருந்தன. கப்பல் மூலம் மட்டுமே பணம் வரும் நிலையில், அது எப்போது வரும் என்பது தெரியாத நிலைமையே இருந்தது.

பணம் வந்ததும் அதை மக்களுக்குத் தெரியப்படுத்த எமக்கு உதவியது 'உதயன்' மட்டுமே. உதயன் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன் எம்முடன் எந்தப் பிரதிபலனும் எதிர்பார்க்காது ஒத்துழைத்தார். 'உதயன்' மூலமே அறிவிப்புக்களை வெளியிட்டு எமது நடவடிக்கைகளை நடத்திச் செல்ல முடிந்தது. 'உதயன்' அவ்வாறு செயற்பட்டிருக்காவிட்டால் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இது மட்டுமல்ல போர்க் காலத்தில் மக்களுக்காக உதயன் சேவைகளை வழங்கியிருந்தது. நெருக்கடிகள் கொடுக்கப்பட்டபோதும், தாக்குதல்கள் நடத்தப்பட்டபோதும் உதயன் பத்திரிகை ஊடாக மக்கள் சேவையை ஈ.சரவணபவன் தொடர்ந்துகொண்டிருந்தார்.

40 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் மக்களுக்காக சேவையாற்றிவரும் ஈ.சரவணபவனை வெற்றியீட்ட வைக்கும் பொறுப்பு எம் அனைவருக்கும் உண்டு. நடக்கவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் மாம்பழம் சின்னத்துக்கு வாக்களித்து ஈ.சரவணபவனை நாடாளுமன்றத்துக்கு அனுப்புவோம் - என்றார்.

## பலரின் விடுதலைக்கு காரணமான சட்டத்தரணி தவராசாவுக்கு ஆதரவு

### வடக்கு - கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் செயலாளர் லீலாவதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.11

ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா பலரின் விடுதலைக்குக் காரணமாகவிருந்தவர். அவர் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவது மக்களுக்குக் கிடைத்த அதிர்ஷ்டம் என்றே நினைக்கின்றேன். அவரின் வெற்றியை நாம் எதிர்பார்த்திருக்கின்றோம்.

-இவ்வாறு வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் செயலாளர் லீலாவதி ஆனந்தராஜா தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா எமக்குப் பல உதவிகளைச் செய்திருக்கின்றார். பல போராளிகளின் விடுதலைக்குக் காரணமாக இருந்தவர். அவர் ஒரு புத்தகம் வெளியிட்டிருந்தார். நான் அந்தப் புத்தக வெளியீட்டுக்குச் சென்றிருந்தேன். அங்கு வந்திருந்த பலர் தங்களின் விடுதலைக்கு ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசாவே காரணம் என்று கூறியதைக் கண்டேன்.

அவர் இத்தனை காலமும் அரசியல் பாதையில் மிகவும் பொறுமை காத்திருந்தார். கட்சி அவரைத் திட்டமிட்டு ஒதுக்கினாலும் அவர் கட்சிப் பற்றோடு அவற்றையெல்லாம் பொறுத்திருந்தார். அந்தப் பொறுமைக்கு நாம் மதிப்பளிக்கவேண்டும். கட்சியின் கொழும்பு மாவட்டத்துக்குத் தலைவராக இருந்தும் கூட அவர் நாடாளுமன்றப்பதவிக்குமுட்டிமோதவில்லை. இம்முறை அவர் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவது தமிழ் மக்களுக்குக் கிடைத்த அதிர்ஷ்டம் என்றே கூறவேண்டும். அவர் தமிழர்களுக்கு ஒரு விடிவைத் தருவார் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. அவரின் வெற்றியை நாங்கள் எதிர்பார்த்திருக்கின்றோம் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org